**அட்டவணை 11.3: முன்னேறு அலைகளுக்கும், நிலை அலைகளுக்குமிடையேயான ஒப்பீடு**

| வ.எண் | முன்னேறு அலைகள் | நிலை அலைகள் |
|---|---|---|
| 1. | முன்னேறு குறுக்கலையில் முகடும், அகடும் ஏற்படும். முன்னேறு நெட்டலைகளில் இறுக்கமும், தளர்ச்சிகளும் ஏற்படும். இந்த அலைகள் ஓர் ஊடகத்தில் முன்நோக்கியோ அல்லது பின்னோக்கியோ நகர்ந்து கொண்டிருக்கும். அதாவது ஒரு குறிப்பிட்ட திசைவேகத்துடன் ஊடகம் ஒன்றில் முன்னேறிக் கொண்டிருக்கும். | நிலை குறுக்கலைகளில் முகடும், அகடும் ஏற்படும் நிலை நெட்டலைகளில் இறுக்கமும், தளர்ச்சிகளும் ஏற்படும். இந்த அலைகள் ஊடகத்தில்முன்னோக்கியோபின்னோக்கியோ நகராது. இவை ஊடகத்தில் முன்னேறாத அலைகள். |
| 2. | அலை செல்லும் திசையில் உள்ள அனைத்து துகள்களும் சம வீச்சுடன் அதிர்வுறும் | கணுவில் உள்ள துகள்கள் தவிர மற்ற அனைத்து துகள்களும் வெவ்வேறு வீச்சுகளுடன் அதிர்வுறும். வீச்சு கணுவில் சுழி அல்லது சிறுமம். எதிர்கணுவில் பெருமம். |
| 3. | ஆற்றலை தாங்கிச் செல்லும். | ஆற்றலைக் கடத்துவதில்லை. |

(2) பெரும வீச்சு நிலையிலுள்ள புள்ளிகள் எதிர்க்கணு எனவும், சுழி வீச்சு நிலையிலுள்ள புள்ளிகள் கணு எனவும் அழைக்கப்படுகிறது.

(3) அடுத்தடுத்த இரு கணு அல்லது எதிர்க்கணுக்களுக்கிடையேயான தொலைவு $\frac{\lambda}{2}$.

(4) ஒரு கணு, அதற்கு அடுத்த எதிர்க்கணுவிற்கு இடையேயான தொலைவு $\frac{\lambda}{4}$.

(5) நிலையான அலைகளின் வழியே கடத்தப்படும் ஆற்றல் சுழியாகும்.

## 11.8.3 சுரமானியில் ஏற்படும் நிலைஅலைகள்

சுரம் என்பது ஒலியுடன் தொடர்புடையது. அதனால் சுரமானி என்பது ஒலி தொடர்பானவற்றை அளக்கப்பயன்படும் கருவி. கம்பிகளில் ஏற்படும் நிலையான குறுக்கலைகளின் அதிர்வெண், கம்பியின் இழுவிசை, அதிர்வு நீளம், ஓரலகு கம்பியின் நிறை ஆகியவற்றை காட்சி விளக்கம் செய்து அளக்க பயன்படுத்தும் கருவியாகும்.

எனவே, இக்கருவியை பயன்படுத்தி கீழ்க்கண்ட அளவுகளை அளக்கலாம்.




KGJEGC

**படம் 11.34** சுரமானியின் (sonometer) தோற்றம்




UNIT-11(XI-Physics_Vol-2)_Tamil.indd 263 10-09-2018 15:04:23

(a) இசைக்கவை அல்லது மாறு திசை மின்னோட்டத்தின் அதிர்வெண்

(b) கம்பியின் இழுவிசை

(c) தொங்கவிடப்பட்ட பொருளின் நிறை

**அமைப்பு:**

சுரமானி என்பது ஒரு மீட்டர் நீளமுள்ள ஒரு மரப்பெட்டி அதன் மீது சீரான உலோகக்கம்பி பொருத்தப்பட்டிருக்கும். கம்பியின் ஒரு முனை ஒரு கொக்கியுடனும், மறுமுனை ஒரு உருளை கப்பி வழியே ஓர் நிறைத்தாங்கியுடனும் படம் 11.34 ல் காட்டியவாறு இணைக்கப்பட்டுள்ளது. கம்பியின் இழுவிசையை அதிகரிக்க மறுமுனையில் நிறைகள் சேர்க்கப்படுகிறது. இரண்டு நகர்த்தக் கூடிய கூர் முனைகள் கம்பியை கீழே தொட்டவாறு சுரமானியின் பலகை மீது வைக்கப்பட்டுள்ளன. அவற்றிற்கிடையேயானத் தொலைவை மாற்றி அதிர்வுறும் கம்பியின் நீளத்தை மாற்றலாம்.

**செயல்பாடு:**

நிலையான குறுக்கலைகள் கம்பியில் ஏற்படுத்தப்படுகிறது. எனவே கூர்முனை P, Q, வில் கணுக்களும், அவற்றிற்கிடையில் எதிர் கணுக்களும் உருவாகின்றன. அதிர்வுறும் கம்பியின் நீளம் $l$ என்க.

$$l = \frac{\lambda}{2} \Rightarrow \lambda = 2l$$

அதிர்வுறும் கம்பியின் அதிர்வெண் $f$ என்க. $T$ கம்பியின் இழுவிசை, $\mu$ என்பது ஓரலகு கம்பியின் நிறை எனில், சமன்பாடு (11.13) –லிருந்து நாம் பெறுவது

$$f = \frac{v}{\lambda} = \frac{1}{2l}\sqrt{\frac{T}{\mu}} \text{ ஹெர்ட்ஸ்} \qquad (11.66)$$

$\rho$ என்பது கம்பிப் பொருளின் அடர்த்தி, $d$ கம்பியின் விட்டம் எனில்

$$\mu = \text{பரப்பு} \times \text{அடர்த்தி} = \pi r^2 \rho = \frac{\pi \rho d^2}{4}$$

$$\text{frequency } f = \frac{v}{\lambda} = \frac{1}{2l}\sqrt{\frac{T}{\frac{\pi d^2 \rho}{4}}}$$

$$\therefore \quad f = \frac{1}{ld}\sqrt{\frac{T}{\pi\rho}} \qquad (11.67)$$

**எடுத்துக்காட்டு 11.21:**

$f$ என்பது கம்பியின் அடிப்படை அதிர்வெண் என்க. கம்பியை $l_1$, $l_2$, $l_3$ நீளம் கொண்ட மூன்று பகுதிகளாக பிரிக்கும்போது, $f_1$, $f_2$ மற்றும் $f_3$, என்பன முறையே மூன்று பகுதிகளின் அடிப்படை அதிர்வெண்கள் என்க. எனில்

$$\frac{1}{f} = \frac{1}{f_1} + \frac{1}{f_2} + \frac{1}{f_3}$$ என நிறுவுக.

**தீர்வு:**

ஒரு குறிப்பிட்ட இழுவிசை $T$, நீள் நிறை $\mu$ (ஓரலகு நீளத்திற்கான நிறை) க்கு, அதிர்வெண், அதிர்வுறும் கம்பியின் நீளத்திற்கு $l$ எதிர்த்தகவில் இருக்கும்.

$$f \propto \frac{1}{l} \Rightarrow f = \frac{v}{2l} \Rightarrow l = \frac{v}{2f}$$

முதல் அதிர்வுறும் கம்பிக்கு,

$$f_1 = \frac{v}{2l_1} \Rightarrow l_1 = \frac{v}{2f_1}$$

இரண்டாவது அதிர்வுறும் கம்பிக்கு,

$$f_2 = \frac{v}{2l_2} \Rightarrow l_2 = \frac{v}{2f_2}$$

மூன்றாவது அதிர்வுறும் கம்பிக்கு

$$f_3 = \frac{v}{2l_3} \Rightarrow l_3 = \frac{v}{2f_3}$$

∴ மொத்த நீளம்

$$l = l_1 + l_2 + l_3$$

$$\frac{v}{2f} = \frac{v}{2f_1} + \frac{v}{2f_2} + \frac{v}{2f_3} \Rightarrow \frac{1}{f} = \frac{1}{f_1} + \frac{1}{f_2} + \frac{1}{f_3}$$

## 11.8.4 அடிப்படை அதிர்வெண் மற்றும் மேற்சுரங்கள்

திடமான எல்லைகளை $x = 0$ மற்றும் $x = L$ ஆக கருதுவோம். கம்பியை மையத்தில் இருந்துஆட்டி (கிதார் கம்பி) நிலை அலைகள் ஏற்படுத்துக. அந்த நிலை அலைகள் குறிப்பிட்ட அலைநீளத்தை பெற்றிருக்கிறது. எல்லைகளில் வீச்சு குறைந்து மறைவதால், இடப்பெயர்ச்சிகள் கீழ்க்கண்ட நிபந்தனைக்கு உட்பட வேண்டும்.

$$y(x=0,t)=0 \text{ மற்றும் } y(x=L,t)=0 \quad (11.68)$$

ஒவ்வொரு கணுவும் $\frac{\lambda_n}{2}$ இடைத்தொலைவில் அமைவதால் நமக்கு $n\left(\frac{\lambda_n}{2}\right)=L$, இங்கு $n$ ஒரு முழு எண், L என்பது எல்லைகளின் இடைத்தொலைவு, $\lambda_n$ என்பது எல்லைக்குட்பட்ட நிபந்தனைகளை பூர்த்தி செய்யும் குறிப்பிட்ட அலை நீளமாகும்.

$$\lambda_n=\left(\frac{2L}{n}\right) \quad (11.69)$$

n மதிப்பை சுழியாக கருதினால், அலைநீளம் என்னவாகும்? இது அனுமதிக்கப்படவில்லை ஏன்?

எனவே, குறிப்பிட்ட எல்லைக்கு அனைத்து அலை நீளங்களும் ஏற்படாது, குறிப்பிட்ட அலைநீளம் மட்டுமே ஏற்படும்.

$n = 1$, முதல் நிலை அதிர்வுக்கு, $\lambda_1 = 2L$.

$n = 2$, 2ம் நிலை அதிர்வுக்கு,

$$\lambda_2=\left(\frac{2L}{2}\right)=L$$

$n = 3$, 3ம் நிலை அதிர்வுக்கு,

$$\lambda_3=\left(\frac{2L}{3}\right)$$

இவ்வாறாக மற்ற n மதிப்புகளுக்கும் அமையும். ஒவ்வொரு நிலை அதிர்வுக்குமான, அதிர்வெண் இயல்நிலை அதிவெண் (natural Frequency) எனப்படும். அதை கீழ்க்கண்டவாறு கணக்கிடலாம்.

$$f_n=\frac{v}{\lambda_n}=n\left(\frac{v}{2L}\right) \quad (11.70)$$

இந்த இயல் அதிர்வெண்ணின், மிகக் குறைந்த மதிப்பு அடிப்படை அதிர்வெண் (fundamental Frequency) எனப்படும்.

$$f_1=\frac{v}{\lambda_1}=\left(\frac{v}{2L}\right) \quad (11.71)$$

இரண்டாவது இயல் அதிர்வெண் முதல் மேற்சுரம் எனப்படும்.

$$f_2=2\left(\frac{v}{2L}\right)=\frac{1}{L}\sqrt{\frac{T}{\mu}}$$

மூன்றாவது இயல் அதிர்வெண் 2 வது மேற்சுரம் எனப்படும்.

$$f_3=3\left(\frac{v}{2L}\right)=3\left(\frac{1}{2L}\sqrt{\frac{T}{\mu}}\right)$$

மேலும் இதுபோன்று அமையும் எனவே, n வது இயல் அதிர்வெண்.

$$f_n = nf_1 \quad \text{இங்கு } n \text{ ஒரு முழு எண்} \quad (11.72)$$

இயல் அதிர்வெண்கள், அடிப்படை அதிர்வெண்ணின் முழு எண் மடங்குகளாக அமையும்போது, அந்த அதிர்வெண்கள் சீரிசைகள் எனப்படும். எனவே, முதல் சீரிசை என்பது $f_1 = f_1$ (அடிப்படை அதிர்வெண் முதல் சீரிசை எனப்படும்),

2 வது சீரிசை $f_2 = 2f_1$, 3வது சீரிசை $f_3 = 3f_1$ மற்றும் பிற.

### எடுத்துக்காட்டு 11.22

கிட்டார் இசைக்கருவியிலுள்ள கம்பியின் நீளம் 80 cm, நிறை 0.32 கிராம், இழுவிசை 80 N எனில், ஏற்படும் முதல் நான்கு குறைவான அதிர்வெண்களைக் காண்க.

**தீர்வு:**

அலையின் திசைவேகம்

$$v=\sqrt{\frac{T}{\mu}}$$



UNIT-11(XI-Physics_Vol-2)_Tamil.indd 265 10-09-2018 15:04:29

கம்பியின் நீளம் $L = 80$ cm=0.8 m

கம்பியின் நிறை, m = 0.32 $g$ =0.32 × $10^{-3}$kg

எனவே, நீள்நிறை

$$\mu = \frac{0.32\times10^{-3}}{0.8} = 0.4\times10^{-3}\,kg\,m^{-1}$$

கம்பியின் இழுவிசை, $T = 80\ N$

$$v = \sqrt{\frac{80}{0.4\times10^{-3}}} = 447.2\ \text{m s}^{-1}$$

அடிப்படை அதிர்வெண் $f_1$ க்கான அலைநீளம் $\lambda_1 = 2L = 2 \times 0.8 = 1.6$ m

அலைநீளம் $\lambda_1$ விற்கான, அடிப்படை அதிர்வெண்

$$f_1 = \frac{v}{\lambda_1} = \frac{447.2}{1.6} = 279.5\,Hz$$

இதேபோல், இரண்டாவது சீரிசைக்கான, 3 வது 4 வது சீரிசைக்கான அதிர்வெண்கள்

$$f_2 = 2f_1 = 559\ \text{Hz}$$

$$f_3 = 3f_1 = 838.5\ \text{Hz}$$

$$f_4 = 4f_1 = 1118\ \text{Hz}$$

### 11.8.5 இழுத்துக் கட்டப்பட்ட கம்பியில் ஏற்படும் குறுக்கலைக்கான விதிகள்:

மூன்று விதிகள்

(i) **நீளத்திற்கான விதி :**

கொடுக்கப்பட்ட கம்பியின், இழுவிசை $T$ (நிலையானது) மற்றும் ஓரலகு நீளத்திற்கான நிறை $\mu$ (நிலையானது) எனில், அதிர்வெண் அதிர்வுறும் கம்பியின் நீளத்திற்கு எதிர்த்தகவில் அமையும்.

$$f \propto \frac{1}{l} \Rightarrow f = \frac{C}{l}$$

$$\Rightarrow l\times f = \text{C},\ \text{இங்கு C மாறிலி}$$

(ii) **இழு விசைக்கான விதி:**

கொடுக்கப்பட்ட அதிர்வுறும் கம்பியின் நீளம் $l$ (நிலையானது) மற்றும் ஓரலகு நீளத்திற்கான நிறை $\mu$ (நிலையானது) எனில் அதிர்வெண் இழுவிசை $T$ இன் இருமடி மூலத்திற்கு நேர்தகவில் அமையும்.

$$f \propto \sqrt{T}$$

$$\Rightarrow f = A\sqrt{T},\ \text{இங்கு A ஒரு மாறிலி}$$

(iii) **நிறைக்கான விதி:**

கொடுக்கப்பட்ட அதிர்வுறும் கம்பியின் நீளம் $l$ (நிலையானது) மற்றும் இழுவிசை $T$ (நிலையானது) எனில் அதிர்வெண், ஓரலகு நீளத்திற்கான நிறை $\mu$ இன் இருமடிமூலத்திற்கு எதிர்த்தகவில் அமையும்.

$$f \propto \frac{1}{\sqrt{\mu}}$$

$$\Rightarrow f = \frac{B}{\sqrt{\mu}}.\ \text{இங்கு B ஒரு மாறிலி}$$

## 11.9 செறிவு (INTENSITY) மற்றும் உரப்பு (LOUDNESS):

ஓர் ஒலி மூலம் மற்றும் இரு கேட்பவரை (ஒலியை கேட்பவர்) கருதுக. ஒலி மூலம் ஒலியை உமிழ்கிறது மேலும் ஆற்றலை எடுத்துச் செல்கிறது. யார் அளந்தாலும் ஒலியின் ஆற்றல், அனைவருக்கும் ஒரே அளவாகவே இருக்கும். எனவே, ஒலி ஆற்றல் அப்பகுதியில் உள்ள கேட்பவரைச் சார்ந்ததல்ல. ஆனால் இரு கேட்பவர்களை கருதினால் அவர்கள் உணரும் ஒலி மாறுபட்டது. இது காதின் உணர்திறன் போன்ற சில காரணிகளைச் சார்ந்தது. இவற்றை அளவிட செறிவு, உரப்பு என்ற இரு அளவுகளை வரையறுக்கிறோம்.

### 11.9.1 ஒலியின் செறிவு

ஒலிமூலம் ஒன்றிலிருந்து ஒலி அலைகள் பரவும்போது, ஆற்றலானது சுற்றியுள்ள அனைத்து, (இயலக்கூடிய) வழிகளிலும் எடுத்துச்செல்லப்படும்.

ஓரலகு நேரத்தில் அல்லது ஒரு வினாடியில் உமிழப்படும் அல்லது ஊடுருவும் சராசரி ஒலி ஆற்றலே, ஒலியின் திறன் எனப்படும்.




**படம் 11.35** ஒலி அலைகளின் செறிவு

எனவே, ஒலி முன்னேறும் திசைக்கு செங்குத்தாக ஓரலகு பரப்பின் வழியே ஊடுருவிச் செல்லும் ஒலித்திறனே, ஒலியின் செறிவு (Intensity) என வரையறுக்கப்படுகிறது.

ஒரு குறிப்பிட்ட ஒலி மூலத்திற்கு (நிலையான மூலம்), அதன் ஒலிச்செறிவானது ஒலிமூலத்திலிருந்து தொலைவின் இருமடிக்கு எதிர்த்தகவில் அமையும்.

$$I = \frac{\text{ஒலி மூலத்தின் திறன்}}{4\pi r^2} \Rightarrow I \propto \frac{1}{r^2}$$

இதுவே, ஒலிச்செறிவின் எதிர்விகித இருமடி விதியாகும்.

## எடுத்துக்காட்டு 11.23

நாயைப் பார்த்து அழும் குழந்தையின் அழுகுரலை 3.0 m தொலைவிலிருந்து கேட்கும்போது ஒலிச்செறிவு $10^{-2}\ W m^{-2}$. குழந்தையின் அழுகுரலை $6.0\ m$ தொலைவிலிருந்து கேட்கும்போது ஒலிச்செறிவு எவ்வளவாக இருக்கும்.

தீர்வு:

$I_1$ என்பது 3.0 m தொலைவில் உள்ள ஒலிச்செறிவு என்க. அதன் மதிப்பு $10^{-2}\ W m^{-2}$

$I_2$ என்பது 6.0 m தொலைவில் உள்ள ஒலிச்செறிவு என்க.

$$r_1 = 3.0\text{ m}, \quad r_2 = 6.0\text{ m}$$

எனவே, $I \propto \frac{1}{r^2}$

வெளியீடு திறன் கேட்பவரை பொறுத்தது அல்ல, குழந்தையை மட்டுமே பொறுத்தது.

$$\frac{I_1}{I_2} = \frac{r_2^2}{r_1^2}$$

$$I_2 = I_1 \frac{r_1^2}{r_2^2}$$

$$I_2 = 0.25 \times 10^{-2}\ W m^{-2}$$

KGTAHZ

## 11.9.2 ஒலியின் உரப்பு

ஒரே செறிவு கொண்ட இரு ஒலி மூலங்கள் ஒரே ஒலி உரப்பு பெற்றிருக்கத் தேவையில்லை. எடுத்துக்காட்டாக பலூன் ஒன்று அமைதியான மூடப்பட்ட அறையில் வெடிக்கும்போது அதன் உரப்பு அதிகமாகவும், அதே பலூன் சத்தமான சந்தையில் வெடிக்கும்போது உரப்பு மிகக்குறைவாகவும் இருக்கும். இங்கு செறிவு சமமாக இருப்பினும் உரப்பு அவ்வாறாக இல்லை. ஒலிச்செறிவு அதிகரிக்கும்போது உரப்பும் அதிகரிக்கும். ஒலியின் செறிவைக் காட்டிலும் இங்கு கூடுதலாக உற்றுநோக்குபவரின் நுட்பம் மற்றும் அனுபவம் ஆகிய காரணிகள் எவ்வளவு அதிக உரப்பு உள்ள ஒலி என்பதை அறிவதில் பங்கு வகிக்கிறது. இதுவே ஒலியின் உரப்பு எனப்படுகிறது. கேட்பவரின் உணர்திறனும் இங்கு பங்கு வகிக்கிறது. எனவே, ஒலி உரப்பு, ஒலியின் செறிவு மற்றும் காதின் உணர்திறன் (இது தெளிவாக கேட்பவரைப் பொறுத்த அளவு. மேலும் இது ஒருவருக்கு ஒருவர் மாறுபடும்) ஆகியவற்றைப் பொருத்தது.

ஆனால் ஒலிச்செறிவு கேட்பவரைப் பொறுத்தது அல்ல. எனவே, ஒலி உரப்பு என்பது "ஒலியை காது உணரும் திறனின் நிலை அல்லது கேட்பவரின் ஒலி உணரும் திறன்" என வரையறுக்கப்படுகிறது.

## 11.9.3 ஒலியின் செறிவு மற்றும் உரப்பு

நமது காது உணரக்கூடிய ஒலியின் செறிவு இடைவெளி $10^{-2}\ Wm^{-2}$ லிருந்து $20\ W m^{-2}$. வெபர் – பெக்னர் விதிப்படி "உரப்பு (L) மனிதர்களாலன்றி


UNIT-11(XI-Physics_Vol-2)_Tamil.indd 267 10-09-2018 15:04:32

கருவி ஒன்றின் மூலம் அளக்கப்பட்ட செறிவின் (I) மடக்கை மதிப்புக்கு நேர்த்தகவில் இருக்கும்.

$$L \propto \ln I$$

$$L = k \ln I$$

இங்கு $k$ ஒரு மாறிலி. இது அளக்கும் அலகைச் சார்ந்தது.

இரண்டு உரப்புகள் $L_1$ மற்றும் $L_0$ இற்கு இடையேயான வேறுபாடு, துல்லியமாக அளக்கப்பட்ட இருசெறிவுகளுக்கிடையேயான சார்பு உரப்பு ஆகும். கணிதப்படி ஒலிச் செறிவு மட்டங்கள்

$$\Delta L = L_1 - L_0 = k \ln I_1 - k \ln I_0 = k \ln\left[\frac{I_1}{I_0}\right]$$

$k = 1$ எனில், ஒலி செறிவு மட்டம் பெல் (bel) என்ற அலகால் அளக்கப்படுகிறது. (அலெக்ஸாண்டர் கிரகாம் பெல் நினைவாக)

$$\Delta L = \ln\left[\frac{I_1}{I_0}\right] \text{ பெல்}$$

இது நடைமுறையில் பெரிய அலகு. எனவே டெசிபல் (decibel) என்ற சிறிய அலகை பயன்படுத்துகிறோம்.

$$1 \text{ டெசிபெல்} = \frac{1}{10} \text{ பெல்.}$$

எனவே, மேற்கண்ட சமன்பாட்டை 10 ஆல் பெருக்கி, 10 ஆல் வகுக்கக் கிடைப்பது,

$$\Delta L = 10\left(\ln\left[\frac{I_1}{I_0}\right]\right)\frac{1}{10} \text{ பெல்}$$

$$\Delta L = 10 \ln\left[\frac{I_1}{I_0}\right] \text{ டெசிபெல்} (k = 10)$$

நடைமுறைப் பயன்பாட்டிற்காக, இயற்கை மடக்கைக்கு (natural logarithm) பதிலாக 10 அடிமான மடக்கையை பயன்படுத்துகிறோம்.

$$\Delta L = 10 \log_{10}\left[\frac{I_1}{I_0}\right] \text{ டெசிபெல்} \quad (11.73)$$

**எடுத்துக்காட்டு 11.24:**

ஒலித்துக் கொண்டுள்ள இசைக்கருவி ஒன்றின் ஒலி மட்டம் 50 dB. மூன்று ஒத்த இசைக்கருவிகள் இணைந்து ஒலிக்கும்போது, தொகுபயன் செறிவைக் காண்.

தீர்வு:

$$\Delta L = 10 \log_{10}\left[\frac{I_1}{I_0}\right] = 50\ dB$$

$$\log_{10}\left[\frac{I_1}{I_0}\right] = 5\ dB$$

$$\frac{I_1}{I_0} = 10^5 \Rightarrow I_1 = 10^5\, I_0 = 10^5 \times 10^{-12}\ Wm^{-2}$$

$$I_1 = 10^{-7}\ Wm^{-2}$$

மூன்று இசைக்கருவிகள் இணைந்து ஒலிப்பதால்,

$$I_{\text{தொகுபயன்}} = 3I_1 = 3 \times 10^{-7}\ Wm^{-2}.$$

## 11.10 காற்று தம்பத்தின் அதிர்வு

நாதஸ்வரம், மற்றும் பிற இசைக்கருவிகள் காற்றுக் கருவிகள் எனப்படும். இவை காற்றுத்தம்ப அதிர்வுகள் தத்துவத்தில் இயங்குகிறது. காற்று கருவியின் எளிய வடிவம் ஆர்கன் (organ – கருவி, இசைப்பேழை) குழாய் ஆகும். எடுத்துக்காட்டாக, புல்லாங்குழல், கிளாரினெட், நாதஸ்வரம்.

ஆர்கன் குழாய் இரு வகைப்படும்.

(a) மூடிய ஆர்கன் குழாய்:



**படம் 11.36** மூடிய ஆர்கன் குழாய்விற்கு கிளாரினெட் ஓர் எடுத்துக்காட்டாகும்

படம் 11.36. ல் காட்டப்பட்ட கிளாரினெட் படத்தை பாருங்கள். இது ஒரு பக்கம் மூடிய மற்றொரு பக்கம் திறந்த குழாய். திறந்த முனை வழியாக வரும் ஒலி, மூடிய பகுதியில் எதிரொலிக்கும் ஒலி உள்ளே வரும் ஒலியுடன் $180°$ எதிர்கட்டத்தில் இருக்கும். எனவே, மூடிய பகுதியில் துகள்களின் இடப்பெயர்ச்சி எப்பொழுதும் சுழி. இடப்பெயர்ச்சி சுழியாவதால்




**படம் 11.37** மூடப்பட்ட முடியில் முனைகளுக்கு (nodes) வழிவகுக்கும் துகள்களின் இயக்கம் மற்றும் திறந்த முடியில் எதிர்முனை (Anti–nodes) (அடிப்படை முனை) (N– முனை, A– எதிர்முனை)

மூடிய பகுதியில் கணுவும். திறந்த பகுதியில் எதிர்க்கணுவும் ஏற்படுகின்றன. அதிர்வுறும் அதிர்வு ஒலியின் எளிய அதிர்வு நிலையை அடிப்படை அதிர்வு நிலை என்போம். மூடிய முனையில் துகள்களின் இயக்கம் இல்லாததால் கணுவும் அடிப்படை அதிர்வு நிலையில் திறந்த முனையில் எதிர்க்கணுவும் உருவாகும். படம் 11.37 ல், L குழாயின் நீளம், ஏற்படும்

அலைகளின் அலைநீளம் $\lambda_1$எனில்,

$$L = \frac{\lambda_1}{4} \ or \ \lambda_1 = 4L \qquad (11.74)$$

ஒலியின் அதிர்வெண்

$$f_1 = \frac{v}{\lambda_1} = \frac{v}{4L} \qquad (11.75)$$

திறந்த முனையில் காற்றை வலுவாக ஊதுவதால், அடிப்படை அதிர்வெண்ணின் முழு எண் மடங்குகளால் ஆன அதிர்வுகளை ஏற்படுத்தலாம். அந்த அலைகள் மேற்சுரங்கள் எனப்படுகின்றன.




**படம் 11.38** இரு கணுக்களும், இருஎதிர் கணுக்களும் உடைய இரண்டாவது நிலை அதிர்வு

படம் 11.38 இரண்டாவது நிலை அதிர்வுகளை (முதல் மேற்சுரம்) காட்டுகிறது. இதில் இரு கணுக்களும் இரு எதிர்கணுக்களும் உள்ளது

$$4L = 3\lambda_2$$

$$L = \frac{3\lambda_2}{4} \text{ அல்லது } \lambda_2 = \frac{4L}{3}$$

அதிர்வெண்

$$f_2 = \frac{v}{\lambda_2} = \frac{3v}{4L} = 3f_1$$

இது முதல் மேற்சுரம் ஆகும். இந்த அதிர்வெண் அடிப்படை அதிர்வெண்ணின் மூன்று மடங்கு என்பதால் இது மூன்றாவது சீரிசை எனப்படும்.




**படம் 11.39** மூன்று கணுக்களும், மூன்று எதிர் கணுக்களும் உடைய மூன்றாவது நிலை அதிர்வு

படம் 11.39 மூன்று கணுக்களும், மூன்று எதிர் கணுக்களும் உடைய மூன்றாவது நிலை அதிர்வு



UNIT-11(XI-Physics_Vol-2)_Tamil.indd 269 10-09-2018 15:04:40

$$4L = 5\lambda_3$$

$$L = \frac{5\lambda_3}{4} \text{ அல்லது } \lambda_3 = \frac{4L}{5}$$

அதிர்வெண்

$$f_3 = \frac{v}{\lambda_3} = \frac{5v}{4L} = 5f_1$$

இது இரண்டாவது மேற்சுரம் ஆகும். இந்த அதிர்வெண் அடிப்படை அதிர்வெண்ணைப் போல் ஐந்து மடங்காக உள்ளதால், 5 வது சீரிசை எனவும் அழைக்கப்படுகிறது.

எனவே மூடிய ஆர்கன் குழாயில் ஏற்படும் அதிர்வுகள் ஒற்றைப்படை வரிசை சீரிசைகளைக் கொண்டுள்ளது. சீரிசையின் அதிர்வெண் $f_n = (2n+1)f_1$. மேற்சுரங்களின் அதிர்வெண்களின் தகவு.

$$f_1 : f_2 : f_3 : f_4 : \ldots = 1 : 3 : 5 : 7 : \ldots \quad (11.76)$$

### (b) திறந்த ஆர்கன் குழாய்:



படம் 11.40 புல்லாங்குழல் திறந்த ஆர்கன் குழாய்க்கு ஓர் எடுத்துக்காட்டு

படத்தில் காட்டப்பட்ட புல்லாங்குழலை காண்க. இது இருபுறமும் திறந்த குழாய் இரு திறந்த முனைகளிலும் எதிர்க்கணுக்கள் உருவாகின்றன.

இங்கு ஏற்படும் மிக எளிய அதிர்வு நிலையை காண்போம். இந்நிலையே அடிப்படை அதிர்வுநிலை எனப்படுகிறது. திறந்த முனைகளில் எதிர்க்கணுக்கள் ஏற்படுவதால், குழாயின் உள்ளே மையத்தில் ஒரேயொரு கணு உருவாகிறது.




படம்11.41 திறந்த ஆர்கன் குழாய் திறந்த முனையில் எதிர்க்கணுவும், மையத்தில் கணுவும் ஏற்படுகிறது.

படம் 11.41, லிருந்து, $L$ என்பது குழாயின் நீளம் என்க ஏற்படும் அலையின் அலைநீளம் காண,

$$L = \frac{\lambda_1}{2} \text{ or } \lambda_1 = 2L \quad (11.77)$$

ஏற்படும் அதிர்வின், அதிர்வெண்

$$f_1 = \frac{v}{\lambda_1} = \frac{v}{2L} \quad (11.78)$$

இதுவே, அடிப்படை அதிர்வெண்

அடிப்படை அதிர்வெண்ணைவிட உயர் அதிர்வெண்களை ஏற்படுத்த திறந்த முனையில் காற்றை வேகமாக ஊத வேண்டும். இத்தகைய அதிர்வெண்கள் மேற்சுரங்கள் எனப்படும்.




படம் 11.42 திறந்த ஆர்கன் குழாயில் இரு கணுக்களும், மூன்று எதிர்க்கணுக்களும் ஏற்படும் அதிர்வு நிலை

படம்11.42 திறந்த ஆர்கன் குழாயில் ஏற்படும் இரண்டாம் நிலை அதிர்வைக் காட்டுகிறது. இது இரு கணுவையும் மூன்று எதிர்க்கணுவையும் உடையது.

$$L = \lambda_2 \text{ or } \lambda_2 = L$$

அதிர்வெண்

$$f_2 = \frac{v}{\lambda_2} = \frac{v}{L} = 2 \times \frac{v}{2L} = 2 f_1$$

இது முதல் மேற்சுரம் எனப்படுகிறது. $n = 2$ என்பதால் இது இரண்டாவது சீரிசை எனவும் அழைக்கப்படுகிறது.




**படம் 11.43** மூன்றாம் நிலை அதிர்வு

படம் 11.43: மூன்றாம் நிலை அதிர்வு இதில் 3 கணுவும், 4 எதிர்க்கணுவும் உள்ளது.

$$L = \frac{3}{2}\lambda_3 \text{ அல்லது } \lambda_3 = \frac{2L}{3}$$

அதிர்வெண்

$$f_3 = \frac{v}{\lambda_3} = \frac{3v}{2L} = 3 f_1$$

இது 3 வது மேற்சுரம். $n = 3$ என்பதால் இது 3 வது சீரிசை எனவும் அழைக்கப்படுகிறது.

எனவே திறந்த ஆர்கன் குழாய் அனைத்து சீரிசைகளையும் உடையது. n ஆவது சீரிசையின் அதிர்வெண் $f_n = nf_1$. எனப்படுகிறது. எனவே, மேற்சுரங்கள் அதிர்வெண்களின் தகவு

$$f_1 : f_2 : f_3 : f_4 : \ldots = 1 : 2 : 3 : 4 : \ldots \quad (11.79)$$

## எடுத்துக்காட்டு 11.25

புல்லாங்குழல் ஒன்று ஏற்படுத்தும் ஒலியின் அதிர்வெண் $450Hz$ இரண்டாவது, மூன்றாவது, நான்காவது சீரிசைகளின் அதிர்வெண்களைக் காண்க. கிளாரினெட் ஒன்று ஏற்படுத்து ஒலியின் அதிர்வெண்ணும் $450Hz$ எனில் முதல் மூன்று சீரிசைகளின் அதிர்வெண்கள் யாவை ?

**தீர்வு:**

புல்லாங்குழல் என்பது திறந்த ஆர்கன் குழாய். எனவே,

2 வது சீரிசை $f_2 = 2f_1 = 900 \text{ Hz}$

3 வது சீரிசை $f_3 = 3f_1 = 1350 \text{ Hz}$

4 வது சீரிசை $f_4 = 4f_1 = 1800 \text{ Hz}$

கிளாரினெட் என்பது மூடிய ஆர்கன் குழாய்

2வது சீரிசை $f_2 = 3f_1 = 1350 \text{ Hz}$

3வது சீரிசை $f_3 = 5f_1 = 2250 \text{ Hz}$

4வது சீரிசை $f_4 = 7f_1 = 3150 \text{ Hz}$

## எடுத்துக்காட்டு 11.26

மூடிய ஆர்கன் குழாயில் 3 வது சீரிசையின் அதிர்வெண் திறந்த ஆர்கன் குழயில் ஏற்படும் அடிப்படை அதிர்வெண்ணுக்கு சமம் எனில், திறந்த குழாயின் நீளம் காண்க. மூடிய குழாயின் நீளம் 30 $cm$ எனக் கொள்க.

**தீர்வு:**

$l_2$ என்பது திறந்த ஆர்கன் குழாயின் நீளம் என்க.
$l_1 = 30\ cm$ என்பது மூடிய ஆர்கன் குழாயின் நீளம்.
கொடுக்கப்பட்ட மூடிய ஆர்கன் குழாயின் 3 வது சீரிசையானது திறந்த ஆர்கன் குழாயின் அடிப்படை அதிர்வெண்ணுக்கு சமம்.
மூடிய ஆர்கன் குழாயின் 3 வது சீரிசை

$$f_2 = \frac{v}{\lambda_2} = \frac{3v}{4l_1} = 3 f_1$$



UNIT-11(XI-Physics_Vol-2)_Tamil.indd 271 10-09-2018 15:04:45

திறந்த ஆர்கன் குழாயின் அடிப்படை அதிர்வெண்

$$f_1 = \frac{v}{\lambda_1} = \frac{v}{2l_2}$$

எனவே,

$$\frac{v}{2l_2} = \frac{3v}{4l_1} \Rightarrow l_2 = \frac{2l_1}{3} = 20\,cm$$

## 11.10.1 ஒத்ததிர்வு காற்றுத் தம்பக் கருவி:




படம் 11.44 ஒத்ததிர்வு காற்றுத் தம்ப கருவியில் முதல், 2வது, 3வது ஒத்ததிர்வுகள்

ஒத்ததிர்வு காற்று தம்பக் கருவி ஒரு மீட்டர் நீளம் உடைய கண்ணாடி அல்லது உலோகக் குழாயால் ஆனது. காற்று தம்பத்தில் ஏற்படும் ஒத்ததிர்வைக் கணக்கிட்டு அதன் மூலம் சாதாரண வெப்பநிலையில் காற்றில் ஒலியின் திசைவேகம் காண பயன்படுகிறது. மேலும் காற்றுத் தம்ப நீளத்தை மாற்றுவதன் மூலம் ஒத்ததிர்வு அதிர்வெண் மாறுபடுவதை அளக்கவும் பயன்படுகிறது. ஒரு முனையைத் திறந்ததாகவும் மறுமுனையை மூடியதாக இக்குழாயுடன் ரப்பர் குழாய் மூலம் இணைக்கப்பட்ட நீர் சேமக்கலம் R ஏற்படுத்தப்பட்டுள்ளது. இந்த முழு அமைப்பும் அளவுகோல் பொருத்தப்பட்ட செங்குத்து தாங்கியில் பொருத்தப்பட்டுள்ளது. ரப்பர் குழாயில் பாதியளவு நீர் நிரப்பப்பட்டுள்ளது. நீர் மட்டத்தை சேமக்கலத்தின் (R) உயரத்தை மாற்றுவதன் மூலம், தேவைக்கு ஏற்ப மாற்றிக் கொள்ளலாம். நீரின் மேல் பரப்பு மூடிய பகுதியாகவும் மறுமுனை திறந்த முனையாகவும் செயல்படும். எனவே, இது மூடிய ஆர்கன் குழாயாக செயல்படுகிறது.

அலையின் கணு நீரின் மேற்பரப்பிலும் எதிர்கணு திறந்த முனையிலும் ஏற்படும். திறந்த முனையில் இசைக்கவை ஒன்றை அதிர வைத்து பிடித்தால் நெட்டலைகள் உருவாகி படத்தில் (11.44) காட்டியபடி கீழ்நோக்கி நகரும். நீரின் பரப்பை அடைந்தவுடன் இந்த அலை எதிரொளிக்கப்படும் அலையுடன் மேற்பொருந்துவதால் நிலையான அலைகள் ஏற்படும். அதன் நீளத்தை மாற்றி, காற்றுத் தம்பத்தின் அதிர்வெண், இசைக்கவையின் அதிர்வெண்ணுடன் (இசைக்கவையின் இயல் அதிர்வெண்) ஒத்ததிர்வடையச் செய்யும்போது, அதிக உரப்பு உள்ள ஒலி ஏற்படும். இதன் பொருள் காற்றுத்தம்பத்தின் அதிர்வெண், இசைக்கவையின் அதிர்வெண்ணுக்குச் சமமாகி, ஒத்ததிர்வுக்கான நிபந்தனையைப் பெறும். இந்த நிலையானது காற்றுத் தம்பத்தின் நீளம், ஒலி அலையின் அலைநீளத்தின் $\left(\frac{1}{4}\right)^{th}$ மடங்காக அமையும் போது ஏற்படும். முதல் ஒத்ததிர்வானது $L_1$ நீளத்தில் ஏற்படுவதாக கருதுவோம்.

$$\frac{1}{4}\lambda = L_1 \qquad (11.80)$$

ஆனால், எதிர்க்கணு துல்லியமாக திறந்த முனையில் ஏற்படுவதில்லை. எனவே, நாம் ஒரு திருத்தத்தை செய்ய வேண்டும். இதுவே முனை திருத்தம் ($e$), எனப்படுகிறது. எதிர்கணுவானது திறந்த முனையில் ஒரு சிறிய தூரத்தில் ஏற்படுகிறது என்க. எனவே, முதல் அதிர்வு நிலை, முனைத்திருத்தத்துடன்

$$\frac{1}{4}\lambda = L_1 + e \qquad (11.81)$$

இப்பொழுது காற்றுத்தம்பத்தின் நீளத்தை மாற்றி இரண்டாவது ஒத்ததிர்வு நீளம் $L_2$ விற்கு முனை திருத்தத்துடன்

$$\frac{3}{4}\lambda = L_2 + e \qquad (11.82)$$

முனைத்திருத்தத்தை புறக்கணிக்க, சமன்பாடு (11.82) மற்றும் (11.81) ன் வேறுபாட்டை கண்டால்,

$$\frac{3}{4}\lambda - \frac{1}{4}\lambda = (L_2 + e) - (L_1 + e)$$

$$\Rightarrow \frac{1}{2}\lambda = L_2 - L_1 = \Delta L$$

$$\Rightarrow \lambda = 2\Delta L$$

அறை வெப்பநிலையில் ஒலியின் திசைவேகத்தை கீழ்க்கண்டவாறு கணக்கிடலாம்.

$$v = f\lambda = 2f\Delta L$$

முனைத்திருத்தத்தை சமன்பாடு (11.82) , (11.81) யை பயன்படுத்தி காண

$$e = \frac{L_2 - 3L_1}{2}$$

## எடுத்துக்காட்டு 11.27

1.0 $m$ உயரம் உடைய குழாயின் மேலே 343 Hz அதிர்வெண்ணில் அதிர்வுறும் ஒரு அதிர்வு இயற்றி வைக்கப்படுகிறது. ஒரு நீர் ஏற்றி (Pump) மூலம் குழாயில் நீர் விழச் செய்யப்படுகிறது. குழாயில் ஏறும் நீரின் எந்த சிறும உயரத்திற்கு ஒத்ததிர்வு ஏற்படும் ? (காற்றில் ஒலியின் திசைவேகம் 343 m s$^{-1}$)

**தீர்வு:**

அலைநீளம் $\lambda = \frac{343\, ms^{-1}}{343\, Hz}$ =1.0 m

ஒத்ததிர்வும் நீளங்கள் $L_1$, $L_2$ மற்றும் $L_3$ என்க. இதிலிருந்து முதல் ஒத்ததிர்வு நீளம் $L_1$

$$L_1 = \frac{\lambda}{4} = \frac{1}{4} = 0.25 \text{ m}$$

இரண்டாவது ஒத்ததிர்வு $L_2$ நீளத்தில் ஏற்படுகிறது எனில்

$$L_2 = \frac{3\lambda}{4} = \frac{3}{4} = 0.75 \text{ m}$$

மூன்றாவது ஒத்ததிர்வு ஏற்படும் நீளம் $L_3$

$$L_3 = \frac{5\lambda}{4} = \frac{5}{4} = 1.25 \text{ m}$$

மேலும் இதேபோன்று மற்ற ஒத்ததிர்வுகளும் நிகழும். குழாயின் மொத்த நீளம் $1.0\, m$, எனவே, 3, 4, 5 வது அதிர்வுகள் ஏற்பட வாய்ப்பில்லை

எனவே, சிறும உயரம்

$$H_{min} = 1.0 \text{ m} - 0.75 \text{ m} = 0.25 \text{ m}$$

## எடுத்துக்காட்டு 11.28

மாணவன் ஒருவன் ஒத்ததிர்வு தம்பக் கருவியை பயன்படுத்தி காற்றில் ஒலியின் திசைவேகம் காணும் ஆய்வை செய்கிறான். அடிப்படை அதிர்வு நிலையில் காற்று தம்பத்தின் ஒத்ததிர்வு நீளம் 0.2 $m$. அதே இசைக்கவையை பயன்படுத்தி, காற்று தம்ப நீளத்தை மாற்றும்போது முதல் மேற்சுரம் 0.7 $m$. ல் ஏற்படுகிறது. முனைத்திருத்தத்தைக் காண்க.

**தீர்வு:**

முனைத்திருத்தம்

$$e = \frac{L_2 - 3L_1}{2} = \frac{0.7 - 3(0.2)}{2} = 0.05m$$

## எடுத்துக்காட்டு 11.29

ஒத்ததிர்வு காற்று தம்ப கருவியில் ஒரு இசைக்கவையை பயன்படுத்தி காற்று தம்பத்தில ஒத்ததிர்வுகள் ஏற்படுத்தப்படுகிறது. கண்ணாடிக் குழாயிலான இக்கருவியில் அதன் நீளமானது ஒரு பிஸ்டன் மூலம் மாற்றப்படுகிறது. அறை வெப்பநிலையில் இரு அடுத்தடுத்த ஒத்ததிர்வுகள் 20 cm மற்றும் 85 cm களில் ஏற்படுகிறது. காற்றுத் தம்பத்தின் அதிர்வெண் 256 Hz. அறை வெப்பநிலையில் காற்றில் ஒலியின் திசைவேகம் காண்க.



UNIT-11(XI-Physics_Vol-2)_Tamil.indd 273 10-09-2018 15:04:50

**தீர்வு:**

அடுத்தடுத்த ஒத்ததிர்வு நீளங்கள்

$L_1$ = 20 cm மற்றும் $L_2$ = 85 cm

அதிர்வெண் $f$ = 256 Hz

$$v = f\lambda = 2f\Delta L = 2f(L_2 - L_1)$$

$$= 2 \times 256 \times (85 - 20) \times 10^{-2}\ \mathrm{m\,s^{-1}}$$

$$v = 332.8\ \mathrm{m\,s^{-1}}$$

## 11.11 டாப்ளர் விளைவு

காவல்துறை வண்டி அல்லது நோயாளிகளுக்கான அவசரகால ஊர்தி (Ambulance) யின் சைரன் (அபாய ஒலிப்பான்) ஒலி வண்டி நம்மை நெருங்க, நெருங்க அதிகரிப்பதையும், நம்மிடமிருந்து விலகி செல்ல, செல்ல குறைவதையும் கவனித்திருப்பீர்கள்

தொடர் வண்டி பாதையின் அருகே நிற்கும்போது நம்மை கடந்து செல்லும் தொடர் வண்டியின் விசில் சத்தம் முதலில் அதிகரித்து பின்னர் குறையும்.

இதுவே டாப்ளர் விளைவு எனப்படும். இது கிறிஸ்டியன் டாப்ளர் (1803–1853) என்ற இயற்பியல் அறிஞர் பெயரில் அழைக்கப்படுகிறது.




படம் 11.45 ஒலிமூலம், கேட்பவர் இருவரும் நிலையாக உள்ளார்கள். டாப்ளர் விளைவு ஏதும் இல்லை.

ஒலி மூலம் ஒன்று, ஒரு குறிப்பிட்ட அதிர்வெண்ணில் ஒலியை உமிழ்கிறது. இந்த அதிர்வெண்ணை மூலத்தின் அதிர்வெண் $f_s$ என்க. கேட்பவர் (பார்வையாளர்) இந்த ஒலியை கேட்டுக் கொண்டுள்ளார். மூலமும், கேட்பவரும் குறிப்பிட்ட இடைவெளியில் ஓய்வுநிலையில் இருந்தால், கேட்பவர் கேட்கும் ஒலியின் அதிர்வெண் $f_o$ ஆனது, ஒலி மூலத்தின் அதிர்வெண் $f_s$, ஆகவே, அமையும்.

அதாவது $f_0 = f_s$. அதிர்வெண்ணில் மாற்றம் இல்லையாதலால் இந்நிகழ்வில் டாப்ளர் விளைவு இல்லை. மூலமோ, ஆய்வாளரோ அல்லது இருவருமே இயக்கத்திலிருந்தால் என்னவாகும்?நிச்சயமாக, $f_o \neq f_s$. ஊடகத்தில் மூலமும் கேட்பவரும் சார்பு இயக்கத்தில் இருந்தால், கேட்பவர் உணரும் ஒலியின் அதிர்வெண், மூலத்தின் அதிர்வெண்ணிலிருந்து மாறி இருக்கும். இதுவே டாப்ளர் விளைவு எனப்படும். கேட்பவர் உணரும் அதிர்வெண் தோற்ற அதிர்வெண் எனப்படும். ஒலியின் டாப்ளர் விளைவைப் படிக்க கீழ்க்கண்ட நிலைகளை கருத்தில் கொள்ளலாம்.

**மூலமும் கேட்பவரும்:** மூலம் மட்டுமோ அல்லது கேட்பவர் மட்டுமோ அல்லது இருவருமே இயக்கத்தில் இருக்கலாம். மேலும் இயக்கம் மூலத்தையும், கேட்பவரையும் இணைக்கும் நேர்க்கோட்டிலோ அல்லது அந்த நேர்க்கோட்டிலிருந்து θ கோணம் சாய்விலோ இருக்கலாம்.

a. **ஊடகம்:** ஊடகம் நிலையாகவோ அல்லது ஒலி செல்லும் திசைக்கு இணையாகவோ அல்லது எதிர் இணையாகவோ இயங்கலாம்.
b. **ஒலியின் வேகம்:** மூலம் அல்லது கேட்பவரின் வேகம் ஒலியின் வேகத்தைவிட குறைவாகவோ அல்லது அதிகமாகவோஇருக்கலாம்.

கீழ்க்கண்ட பகுதியில் நாம் 3 நிலைகளை மட்டும் ஆய்வு செய்ய உள்ளோம். இங்கு ஊடகம் நிலையாக உள்ளதாக கொள்வோம். இயக்கம் மூலத்தையும் கேட்பவரையும் இணைக்கும் நேர்க்கோட்டில் உள்ளதாக கருதுவோம். மூலம் மற்றும் கேட்பவரின் வேகங்கள் அந்த ஊடகத்தில் ஒலியின் வேகத்தை விடக் குறைவு என வைத்துக்கொள்வோம்:

(i) மூலம் இயக்கத்திலும், கேட்பவர் ஓய்விலும்
  a. மூலம் கேட்பவரை நோக்கி இயங்கும்போது
  b. மூலம் கேட்பவரிலிருந்து விலகிச்செல்லும் போது

(ii) கேட்பவர் இயக்கத்திலும், மூலம் ஓய்விலும் உள்ளபோது.
  a. கேட்பவர், மூலத்தை நோக்கிச்செல்லும் போது

b. கேட்பவர், மூலத்தைவிட்டு விலகிச்செல்லும்போது

(iii) மூலமும், கேட்பவரும் இயக்கத்தில் உள்ளபோது

a. மூலமும், கேட்பவரும் ஒருவரை நோக்கி ஒருவர் இயக்கத்தில் உள்ளபோது

b. மூலமும், கேட்பவரும் ஒருவரை விட்டு ஒருவர் விலகிச் செல்லும்போது

c. மூலம், கேட்பவரை துரத்தும்போது

d. கேட்பவர், மூலத்தை துரத்தும்போது

நிலையான கேட்பவர் மற்றும் நிலையான ஒலிமூலம் எனில் மூலமும், கேட்பவரும், ஊடகத்தைப் பொருத்து ஓய்வில் உள்ளனர் எனப்பொருள்.

## 11.11.1 மூலம் இயக்கத்திலும் கேட்பவர் ஓய்விலும் உள்ளபோது

**a. மூலம், கேட்பவரை நோக்கி இயங்கும்போது**

மூலம் (படம் 11.46 ல் காட்டியவாறு) வலப்பக்கம் நோக்கி $v_s$ வேகத்தில் நகரும்போது, ஒலி மூலம் ஏற்படுத்தும் ஒலியின் அதிர்வெண் $f_s$ என்க. ஊடகத்தில் ஒலியின் திசைவேகம் $v$ எனக் கருதுவோம். மூலம் உமிழும் இறுக்கம் (ஒலி அலை முகப்பு) மூன்று அடுத்தடுத்த கணநேரங்களில் படத்தில் காட்டப்பட்டுள்ளன. அதாவது $x_1$ நிலையில் $C_1$, $x_2$ நிலையில் $C_2$, $x_3$ நிலையில் $C_3$ என்க. $C_1$ புள்ளி A யை நெருங்கும் அதே கணத்தில் $C_2$ புள்ளி B யையும் $C_3$ புள்ளி C யையும் நெருங்கும். படத்திலிருந்து இறுக்கங்கள் $C_1$ க்கும் $C_2$ க்கும் இடைப்பட்ட தொலைவு, $C_2$, $C_3$ க்கு இடைப்பட்ட தொலைவைக் காட்டிலும் சிறியது என்பது புலனாகிறது. ஒலி என்பது நெட்டலை என்பதால், அடுத்தடுத்த இறுக்கங்களுக்கிடையேயான தொலைவு அலைநீளம் என்பதால், ஒலி மூலம் கேட்குநரை நோக்கி இயங்கும்போது, அலை நீளம் குறைகிறது. ஆனால் அதிர்வெண், அலைநீளத்துடன் எதிர்த் தகவில் உள்ளதால், இங்கு அதிர்வெண் அதிகரிக்கிறது.




**படம் 11.46** மூலம் (S) ஓய்வில் உள்ள கேட்பவர் (O) வலது புறம் ஒரு திசைவேகத்தில் நெருங்கும்போது $v_s$

மூலம் (S) $x_1$ நிலையில் உள்ளபோது, கேட்பவர் உணரும் அலைநீளம் $\lambda$ என்க. மூலம் (S) $x_2$ நிலைக்கு செல்லும்போது கேட்பவர் உணரும் அலைநீளம் $\lambda'$ எனவும் கொள்வோம். அலைநீள மாறுபாடு $\Delta\lambda = \lambda - \lambda' = v_s t$. இங்கு $x_1$ லிருந்து $x_2$ வுக்கு மூலம் நகர்வதற்கான $t$ நேரம் என்க.

$$\lambda' = \lambda - v_s t \qquad (11.83)$$

ஆனால், $$t = \frac{\lambda}{v} \qquad (11.84)$$

சமன்பாடு (11.84) யை (11.82) ல் பொருத்த

$$\lambda' = \lambda\left(1 - \frac{v_s}{v}\right)$$

அதிர்வெண், அலை நீளத்தின் எதிர்த்தகவு என்பதால்

$$f' = \frac{v_s}{\lambda'} \quad \text{மற்றும்} \quad f = \frac{v_s}{\lambda}$$

$$f' = \frac{f}{\left(1 - \frac{v_s}{v}\right)} \qquad (11.85)$$

$\frac{v_s}{v} \ll 1$, என்பதால், ஈருறுப்புத் தொடர் விரிவை பயன்படுத்தி, முதல் நிலை $\frac{v_s}{v}$ யை மட்டும் எடுத்துக்கொள்ள

$$f' = f\left(1 + \frac{v_s}{v}\right) \qquad (11.86)$$

**b. மூலம் கேட்பவருக்கு எதிர்த்திசையில் விலகிச் செல்லும்போது:**

மூலத்தின் திசைவேகம் எதிர்த்திசையில் அமைவதால், திசைவேகத்தின் எதிர்க்குறியை பயன்படுத்த $(v_s \to -v_s)$இதை சமன்பாடு (11.83) இல் பொருத்த,



UNIT-11(XI-Physics_Vol-2)_Tamil.indd 275 10-09-2018 15:04:52

$$f' = \frac{f}{\left(1+\frac{v_s}{v}\right)} \qquad (11.87)$$

ஈருறுப்பு தொடர் விரிவை பயன்படுத்த

$$f' = f\left(1-\frac{v_s}{v}\right) \qquad (11.88)$$

## 11.11.2 கேட்பவர் இயக்கத்திலும், மூலம் ஓய்விலும் உள்ளபோது

**a. கேட்பவர், மூலத்தை நோக்கி இயங்கும் போது**




படம் 11.47 கேட்பவர் மூலத்தை நோக்கி நகரும்போது

O என்ற கேட்பவர், மூலம் S யை நோக்கி $v_o$ திசைவேகத்தில் இயங்குகிறார் என்க. மூலம் S ஓய்வில் உள்ளதால் (ஊடகத்தைப் பொருத்து) உண்டாகும். ஒலி அலைகள் $v$ வேகத்தில் செல்கிறது. படம் 11.47 லிருந்து $v_o$, $v$ யும் எதிரெதிர் திசையில் உள்ளன. எனவே அவற்றின் சார்புத்திசைவேகம் $v_r = v + v_0$. ஒலி அலையின் அலை நீளம் $\lambda = \frac{v}{f}$ எனவே கேட்பவர் O உணரும் அதிர்வெண்

$$f' = \frac{v_r}{\lambda}$$

$$f' = \frac{v_r}{\lambda} = \left(\frac{v+v_0}{v}\right)f = f\left(1+\frac{v_0}{v}\right) \qquad (11.89)$$

**b. கேட்பவர், மூலத்திலிருந்து விலகிச்செல்லும் போது**

கேட்பவர் (O) மூலத்திலிருந்து (S) விலகிச்செல்லும்போது, திசைவேகங்கள் $v_0$, $v$ யும் ஒரே திசையில் அமையும். எனவே சார்புத்திசை வேகம் $v_r = v - v_0$. எனவே, கேட்பவர் O உணரும் அதிர்வெண்

$$f' = \frac{v_r}{\lambda} = \left(\frac{v-v_0}{v}\right)f = f\left(1-\frac{v_0}{v}\right) \qquad (11.90)$$

## 11.11.3 இரண்டும் இயக்கத்தில் உள்ளபோது

**a. மூலம் கேட்பவர் ஒருவரை ஒருவர் நோக்கி இயங்கும்போது**




படம் 11.48 மூலமும், கேட்பவரும் ஒருவரை ஒருவர் நோக்கி நகரும்போது

$v_s$, $v_0$ என்பது முறையே மூலம் மற்றும் கேட்பவரின் திசைவேகங்கள் என்க. கேட்பவர் உணரும் தோற்ற அதிர்வெண்ணைக்கான, எளிய கணக்கீட்டிற்காக, போலி (கேட்பவர் அல்லது மூலம்) ஒன்றை இடையில் கருதுவோம். போலி ஓய்வில் உள்ளதால், போலி (கேட்பவர்) உணரும் தோற்ற அதிர்வெண் (அவரை நெருங்கும் மூலத்தினால்) சமன்பாடு(11.85) ல் கொடுக்கப்பட்டவாறு,

$$f_d = \frac{f}{\left(1-\frac{v_s}{v}\right)} \qquad (11.91)$$

இதே கணத்தில் (நேரத்தில்) கேட்பவர் உண்மையான கேட்பவர்) மறுபுறமிருந்து போலியை நோக்கி நகர்கிறார். மூலம் (உண்மையான மூலம்) உண்மையான கேட்குநருக்கு எதிர்திசையில் வருகிறோர். எனவே இந்த கணநேரத்தில் போலி (மூலம்) யை ஓய்வில் உள்ள மூலமாகக் உண்மையான கேட்குநரைப் பொறுத்து கருத வேண்டும்.

சமன்பாடு (11.89) லிருந்து ஓய்வில் உள்ள மூலத்தை (போலி மூலம்) நோக்கி நகரும் கேட்பவர் உணரும் தோற்ற அதிர்வெண்

$$f' = f_d\left(1+\frac{v_0}{v}\right) \Rightarrow f_d = \frac{f'}{\left(1+\frac{v_0}{v}\right)} \qquad (11.92)$$

இது அனைத்து (arbitrary) நேரத்திற்கும் சரி. எனவே, சமன்பாடு (11.91) மற்றும் (11.92) யை ஒப்பிட,

$$\frac{f}{\left(1-\frac{v_s}{v}\right)} = \frac{f'}{\left(1+\frac{v_0}{v}\right)}$$

$$\Rightarrow \frac{v\,f'}{(v+v_0)} = \frac{v\,f}{(v-v_s)}$$

கேட்பவர் உணரும் தோற்ற அதிர்வெண்

$$f' = \left(\frac{v+v_0}{v-v_s}\right)f \qquad (11.93)$$

**b. மூலமும், கேட்பவரும் ஒருவரை விட்டு ஒருவர் விலகிச்செல்லும்போது**




படம் 11.49 மூலமும் கேட்பவரும் விலகிச் செல்லும் போது

முந்தைய நிலை [நிலை (a) போலவே இந்த நிலையிலும் முடிவைக் கொண்டு வரலாம்.

நீண்ட விளக்கமான கணக்கீடுகளுக்கு பதிலாக, படம்11.49,யை புரிந்து கொண்டு (a) நிலைக்கு மாறாக மூலம், கேட்பவர் எதிர், எதிர் திசையில் நகர்வதால், $(v_s \to -v_s)$ எனவும் $(v_0 \to -v_0)$ எனவும் (11.93) ல் பொருத்த,

$$f' = \left(\frac{v-v_0}{v+v_s}\right)f \qquad (11.94)$$

**c. மூலம் கேட்குநரை துரத்தும் போது**




படம் 11.50 மூலம், கேட்குநரை துரத்தும்போது

மேலே பார்த்த நிலை (a) ல், கேட்பவரின் திசைவேகம் எதிர்திசையில் (படம் 11.50 ன்படி) கருதினால், $(v_0 \to -v_0)$ என சமன்பாடு (11.93) ல் பொருத்த,

$$f' = \left(\frac{v-v_0}{v-v_s}\right)f \qquad (11.95)$$

**d. கேட்பவர் மூலத்தை துரத்தும்போது**




படம் 11.51 கேட்பவர், மூலத்தை துரத்தும்போது

நிலை (a) ல், மூலத்தின் திசைவேகத்தை எதிர்திசையில் (படம் 11.51 ன்படி) கருதி $v_s \to -v_s$ என சமன்பாடு (11.94) ல் பொருத்த,

$$f' = \left(\frac{v+v_0}{v+v_s}\right)f \qquad 11.96)$$

ஆசிரியருடன் ஆலோசி

- ஒளியின் டாப்ளர் விளைவு
- ஒலியின் டாப்ளர் விளைவு ஒத்தியியைவு அற்றும் (asymmetrical) ஒளியின் டாப்ளர் விளைவு ஒத்தியியைவாகவும் (symmetrical) உள்ளது.

## 11.11.4 டாப்ளர் விளைவின் பயன்கள்

டாப்ளர் விளைவு பல பயன்களை உடையது. குறிப்பாக ஒளியின் டாப்ளர் விளைவு வானியலில் பயன்படுகிறது. எடுத்துக்காட்டாக தொலைவில் உள்ள விண்மீன்கள் (stars) அல்லது விண்மீன் திரள் (galaxy) களின் நிற மாலைகளை நோக்கி அவை எவ்வளவு தொலைவில், எவ்வளவு திசைவேகத்துடன் புவியை நோக்கியோ அல்லது விலகியோ நகர்வதைக் கண்டுபிடிக்கலாம். நிறமாலைவரிகள், சிவப்பு நிறத்தை நோக்கி இடப்பெயர்ச்சியடைந்தால் (சிவப்பு இடப்பெயர்ச்சி (red shift) விண்மீனானது புவியிலிருந்து நகர்ந்து செல்கிறது எனவும், நீல நிறத்தை நோக்கி இடப்பெயர்ச்சியடைந்தால் (நீல இடப்பெயர்ச்சி blue



UNIT-11(XI-Physics_Vol-2)_Tamil.indd 277 10-09-2018 15:04:57

shift) விண்மீன் புவியை நோக்கி வருவதையும் கண்டு பிடிக்கிறார்கள். $\Delta\lambda$ என்பது டாப்ளர் இடப்பெயர்ச்சி எனில், $\Delta\lambda = \frac{v}{c}\lambda$, இங்கு $v$ விண்மீனின் திசைவேகம். டாப்ளர் விளைவு சார்புத் திசைவேகம் $v$ யின் ஆரவகைக்கூறு (radial component) வை மட்டும் (பார்வைக் கோட்டின் திசையில்) நோக்கி அளக்கிறது.

## எடுத்துக்காட்டு 11.30

கேட்பவரிடமிருந்து விலகி மலை ஒன்றை நோக்கிச் செல்லும் ஒலி மூலம் உமிழும் ஒலியின் அதிர்வெண் 1500 Hz, ஒலி மூலத்தின் திசைவேகம் 6 $ms^{-1}$

(a) மூலத்திலிருந்து நேரடியாக வரும் ஒலியின் அதிர்வெண்ணைக் காண்க.

(b) காற்றில் ஒலியின் திசைவேகம் 330 $m s^{-1}$ எனக் கருதி மலையிலிருந்து எதிரொலித்து வரும் ஒலியின் அதிர்வெண்ணைக் காண்க.

**தீர்வு:**

(a) ஓய்விலுள்ள கேட்குநரிடமிருந்து விலகிச் செல்லும் மூலம்; எனவே, மூலத்திலிருந்து நேரடியாக வரும் ஒலியை உணரும் கேட்குநருக்கு அதிர்வெண்.

$$f' = \frac{f}{\left(1+\frac{v_s}{v}\right)} = \frac{1500}{\left(1+\frac{6}{330}\right)} = 1473\,Hz$$

(b) மலையிலிருந்து எதிரொலித்து வரும் ஒலி கேட்குநரை அடையும்போது

$$f' = \frac{f}{\left(1-\frac{v_s}{v}\right)} = \frac{1500}{\left(1-\frac{6}{330}\right)} = 1528\,Hz$$

## எடுத்துக்காட்டு 11.31

கேட்பவர் ஒருவர் தொடர்வண்டி நிலைய நடை மேடையில் நின்று கொண்டு இரண்டு தொடர் வண்டிகளை நோக்குகிறார். ஒன்று நிலையத்தை நோக்கியும், மற்றொன்று நிலையத்திலிருந்து வெளிநோக்கியும் சம திசைவேகம் 8 $m\,s^{-1}$ ல் செல்கின்றன. இரண்டு தொடர் வண்டிகளும் வெளியிடும் விசில்களின் அதிர்வெண் 240 Hz எனில், கேட்பவர் உணரும் விம்மல்களின் எண்ணிக்கை யாது?

**தீர்வு:**

கேட்பவர் ஓய்வில் உள்ளார்

(i) மூலம் (தொடர்வண்டி) கேட்குநரை நோக்கி இயங்குகிறார்:

தோற்ற அதிர்வெண்,

$$f_{in} = \frac{f}{\left(1-\frac{v_s}{v}\right)} = \frac{240}{\left(1-\frac{8}{330}\right)} = 246\,Hz$$

(ii) மூலம் (தொடர்வண்டி) கேட்குநரிடமிருந்து விலகிச் செல்லும்போது:

தோற்ற அதிர்வெண்

$$f_{out} = \frac{f}{\left(1-\frac{v_s}{v}\right)} = \frac{240}{\left(1-\frac{8}{330}\right)} = 234\,Hz$$

விம்மல்களின் எண்ணிக்கை

$= |f_{in} - f_{out}| = (246-234) = 12$

## பாடச்சுருக்கம்:

- ஊடகத்தின் இடப்பெயர்ச்சி இன்றி, ஆற்றலையும் உந்தத்தையும் ஒருபுள்ளியிலிருந்து மற்றொரு புள்ளிக்கு எடுத்துச் செல்லும் மற்றும் முன்னேறிச் செல்லும் ஒரு மாறுபாடு அலை எனப்படும்.
- அலை பரவ ஊடகம் தேவைப்படும் அலைகள் இயக்க அல்லது இயந்திரவியல் (mechanical) அலைகள் எனப்படும்
- அலை பரவ ஊடகம் தேவையற்ற அலைகள் இயந்திரவியல் அல்லாத அலைகள் எனப்படும்.
- குறுக்கலைகளில் ஊடகத்துகள்கள் அலை முன்னேறிச் செல்லும் திசைக்கு செங்குத்து திசையில் அதிர்வுறும்
- நெட்டலைகளில் ஊடகத்துகள்கள் அலை முன்னேறிச் செல்லும் திசைக்கு இணையாக அதிர்வுறும்.
- அலை பரவ மீள்தன்மையும், நிலைமமும் உள்ள ஊடகம் தேவை
- நீர்மப்பரப்பில் ஏற்படும் (மேடு பள்ளங்கள்) அலைகள் குறுக்கலைகள்; அதிர்வுறும் இசைக்கவை ஒன்று ஏற்படுத்தும் அலைகள் நெட்டலைகள்.
- அடுத்தடுத்த இரு முகடுகள் அல்லது அகடுகளுக்கு இடைப்பட்ட தொலைவு அலைநீளம் எனப்படும்.
- ஒரு வினாடியில் ஒரு குறிப்பிட்ட புள்ளியைக் கடக்கும் அலைகள் அதிர்வெண் எனப்படும்.
- அலையின் திசைவேகம் $v = \lambda f$.
- ஒரு அலை ஒரு புள்ளியைக் கடக்க எடுத்துக்கொள்ளும் நேரம் அலைவுநேரம் T எனப்படும்.
- அதிர்வெண் மூலத்தைப் பொறுத்தது, அலையின் திசை வேகம் ஊடகத்தைப் பொறுத்தது.
- குறுக்கலையின் திசைவேகம் கம்பியின் இழுவிசை, நீள்நிறை (ஓரலகு நீளத்திற்கான நிறை) ஆகியவற்றைப் பொறுத்தது; அலை வடிவத்தைப் பொறுத்தது அல்ல.
- கம்பியில் ஏற்படும் குறுக்கலையின் திசைவேகம் $v=\sqrt{\frac{T}{\mu}}\ ms^{-1}$.
- மீள் தன்மை ஊடகத்தில், நெட்டலைகளின் திசைவேகம் $v=\sqrt{\frac{E}{\rho}}\ ms^{-1}$.
- $20°C$ யில் எதிரொலி (echo) ஏற்பட மூலத்திலிருந்து எதிரொலிக்கும் சுவர் அல்லது மலை அமைய வேண்டிய குறைந்தபட்ச தொலைவு 17.2 மீ
- ஒரு பரிமாண அலைச் சமன்பாடு $\frac{\partial^2 y}{\partial x^2}=\frac{1}{v^2}\frac{\partial^2 y}{\partial t^2}$
- அலை எண் $k=\frac{2\pi}{\lambda} rad\, m^{-1}$.
- குறுக்கீட்டு விளைவில் செறிவு $I=I_1+I_2+2\sqrt{I_1 I_2}\cos\varphi$, இங்கு செறிவானது, வீச்சின் இருமடிக்குச் சமம் $I=A^2$.

  ஆக்கக் குறுக்கீட்டு விளைவிற்கு, $I_{\text{பெருமம்}}=\left(\sqrt{I_1}+\sqrt{I_2}\right)^2=\left(A_1+A_2\right)^2$.

  அழிவு குறுக்கீட்டு விளைவிற்கு, $I_{\text{சிறுமம்}}=\left(\sqrt{I_1}-\sqrt{I_2}\right)^2=(A_1-A_2)^2$.
- சற்றே மாறுபட்ட அதிர்வெண்கள் உடைய இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட அலைகள் மேற்பொருந்துவதால் ஒரு புள்ளியில் தொகுபயன் ஒலியின் வீச்சு மாற்றமானது குறிப்பிட்ட நேர இடைவெளியில் தொடர்ந்து ஏற்படுகிறது. இந்நிகழ்வே விம்மல் ஆகும். எனவே, ஒரு வினாடியில் உருவாகும் வீச்சு பெருமங்களே விம்மல் அதிர்வெண்.



UNIT-11(XI-Physics_Vol-2)_Tamil.indd 279 10-09-2018 15:05:02

- அதிர்வெண்கள், அடிப்படை அதிர்வெண்ணின் முழு எண் மடங்குகளாக அமைந்தால் அவை சீரிசைகள் எனப்படும். முதல் சீரிசை $v_1 = v_1$, இரண்டாவது சீரிசை $v_2 = 2\ v_1$, மூன்றாவது சீரிசை $v_3 = 3\ v_1$, மேலும் இதேபோல் அமையும்.
- ஒலியின் உரப்பு என்பது "காதில் ஒலியின் கேட்கும்திறன் (உணர்) அளவின் மதிப்பு அல்லது கேட்பவரின் ஒலி புலனுணர்வு திறன்"
- ஒலியின் செறிவு என்பது"ஒலி முன்னேறும் திசைக்கு செங்குத்தாக ஓரலகு பரப்பின் வழியே ஊடுருவிச் செல்லும் ஒலியின் திறன்"
- ஒலிச்செறிவின் அளவு, $\Delta L = 10\log_{10}\left(\frac{I_1}{I_0}\right)$ டெசிபல்.
- மூடிய ஆர்கன் குழாயில் சீரிசைகள் ஒற்றைப்படையில் அமையும் $n$ வது சீரிசையின் அதிர்வெண் $f_n = (2n+1)f_1$.
- மூடிய ஆர்கன் குழாயில் சீரிசைகளின் அதிர்வெண் தகவு $f_1 : f_2 : f_3 : f_4 :... = 1 : 3 : 5 : 7 :...$
- திறந்த ஆர்கன் குழாயில் எல்லா சீரிசைகளும் ஏற்படும் $n$ வது சீரிசையின் அதிர்வெண் $f_n = nf_1$.
- திறந்த ஆர்கன் குழாயில் சீரிசைகளின் அதிர்வெண் தகவு $f_1 : f_2 : f_3 : f_4 :... = 1 : 2 : 3 : 4 :...$
- ஊடகத்தைப் பொறுத்து மூலமும், கேட்பவரும் சார்வு இயக்கத்திலிருந்தால், கேட்பவர் உணரும் ஒலியின் அதிர்வெண், மூலத்தின் அதிர்வெண்ணிலிருந்து மாறுபட்டிருக்கும். இதுவே டாப்ளர் விளைவு
- கேட்பவர் உணரும் அதிர்வெண் தோற்ற அதிர்வெண் (apparent frequency) ஆகும்.
- மூலம் கேட்பவரை நோக்கி நகரும்போது தோற்ற அதிர்வெண் $f' = f\,(1 + \frac{v_s}{v})$.
- மூலம், கேட்பவரிலிருந்து விலகிச்செல்லும் போது, $f' = f\,(1 - \frac{v_s}{v})$.
- கேட்பவர், மூலத்தை நோக்கி நகரும்போது, $f' = f\,(1 + \frac{v_0}{v})$.
- கேட்பவர், மூலத்திலிருந்து விலகிச் செல்லும்போது, $f' = f\,(1 - \frac{v_0}{v})$
- மூலமும், கேட்பவரும் ஒருவரை ஒருவர் நெருங்கும்போது, $f' = (\frac{v + v_0}{v - v_s})f$
- மூலமும், கேட்பவரும், ஒருவரை விட்டு ஒருவர் விலகிச் செல்லும்போது, $f' = (\frac{v - v_0}{v + v_s})f$
- மூலம், கேட்பவரை விரட்டிச் செல்லும்போது, $f' = (\frac{v - v_0}{v - v_s})f$.
- கேட்பவர், மூலத்தை விரட்டிச் செல்லும்போது, $f' = (\frac{v + v_0}{v + v_s})f$.



UNIT-11(XI-Physics_Vol-2)_Tamil.indd 280 10-09-2018 15:05:06

# கருத்து வரைபடம்






UNIT-11(XI-Physics_Vol-2)_Tamil.indd 281 10-09-2018 15:05:07

## I. சரியான விடையைத் தேர்ந்தெடுத்து எழுது:

1. மாணவர் ஒருவர் தனது கிட்டாரை, 120 Hz இசைக்கவையால் மீட்டி, அதேநேரத்தில் 4 வது கம்பியையும் மீட்டுகிறான். கூர்ந்து கவனிக்கும்போது, கூட்டு ஒலியின் வீச்சு வினாடிக்கு 3 முறை அலைவுறுகிறது. 4 வது கம்பியின் அதிர்வெண் கீழ்க்கண்டவற்றுள் எது ?

   a) 130 b) 117

   c) 110 d) 120

2. குறுக்கலை ஒன்று A ஊடகத்திலிருந்து B ஊடகத்திற்கு செல்கிறது. A ஊடகத்தில் குறுக்கலையின் திசைவேகம் 500 $ms^{-1}$, அலைநீளம் 5 m. B ஊடகத்தில் திசைவேகம் 600 $ms^{-1}$, எனில் B ல் அதிர்வெண், அலைநீளம் முறையே

   a) 120 Hz மற்றும் 5 m

   b) 100 Hz மற்றும் 5 m

   c) 120 Hz மற்றும் 6 m

   d) 100 Hz மற்றும் 6 m

3. ஒரு குறிப்பிட்ட குழாய்க்கு 1000 Hz விட குறைவான 4 சீரிசை அதிர்வெண்கள் கீழே கொடுக்கப்பட்டுள்ளன. அவை: 300 Hz, 600 Hz, 750 Hz மற்றும் 900 Hz. இந்த தொடரில் விடுபட்ட இரு அதிர்வெண்கள் யாவை?.

   a) 100 Hz, 150 Hz

   b) 150 Hz, 450 Hz

   c) 450 Hz, 700 Hz

   d) 700 Hz, 800 Hz

KGYIVQ

4. கீழ்க்கண்டவற்றுள் எது சரி?.

| A | B |
|---|---|
| (1) தரம் | (A) செறிவு |
| (2) சுருதி | (B) அலை வடிவம் |
| (3) உரப்பு | (C) அதிர்வெண் |

   (1), (2) , (3) க்கான சரியான ஜோடி

   a) (B),(C) மற்றும் (A)

   b) (C), (A) மற்றும் (B)

   c) (A), (B) மற்றும் (C)

   d) (B), (A) மற்றும் (C)

5. கீழ்க்கண்ட அலைகளில் எது அதிக திசைவேகத்தில் செல்லும்?




   இங்கு, $v_A$, $v_B$, $v_C$ மற்றும் $v_D$ என்பன (A), (B), (C), (D) யின் திசைவேகங்கள்

   a) $v_A > v_B > v_D > v_C$

   b) $v_A < v_B < v_D < v_C$

   c) $v_A = v_B = v_D = v_C$

   d) $v_A > v_B = v_D > v_C$

6. 5000 Hz அதிர்வெண் உடைய ஒலி காற்றில் இயங்கி நீர் பரப்பை தாக்குகிறது. நீர், காற்றில் அலைநீளங்களின் தகவு

   a) 4.30 b) 0.23

   c) 5.30 d) 1.23

7. இரு இணையான மலைகளுக்கிடையே நிற்கும் ஒருவன் துப்பாக்கியால் சுடுகிறான். முதல் எதிரொலியை $t_1$ s இலும் 2 வது எதிரொலியை $t_2$ s இலும் கேட்கிறான். மலைகளுக்கிடையேயான இடைவெளி

   a) $\frac{v(t_1 - t_2)}{2}$ b) $\frac{v(t_1 t_2)}{2(t_1 + t_2)}$

   c) $v(t_1 + t_2)$ d) $\frac{v(t_1 + t_2)}{2}$

8. ஒரு முனை மூடிய காற்றுத்தம்பம் ஒன்று 83Hz அதிர்வெண் உடைய அதிர்வுறும் பொருளுடன் ஒத்ததிர்வு அடைகிறது எனில் காற்றுத் தம்பத்தின் நீளம்

   a) 1.5 m b) 0.5 m

   c) 1.0 m d) 2.0 m

9 $x$ திசையில் இயங்கிக் கொண்டுள்ள அலை ஒன்றின் இடப்பெயர்ச்சி $y$ இற்கான சமன்பாடு

$$y=(2 \times 10^{-3})\sin(300t-2x+\frac{\pi}{4}),$$ இங்கு $x$, $y$ மீட்டரிலும் $t$ வினாடியிலும் அளக்கப்பட்டால், அலையின் வேகம்

a) 150 $ms^{-1}$ b) 300 $ms^{-1}$

c) 450 $ms^{-1}$ d) 600 $ms^{-1}$

10. இரண்டு சீரான கம்பிகள் சேர்ந்தாற்போல் அவற்றின் அடிப்படை அதிர்வெண்களில் அதிர்வுறுகின்றன. அவற்றின் இழுவிசைகள், அடர்த்திகள், நீளங்கள், விட்டங்களின் தகவுகள் முறையே 8 : 1, 1 : 2, $x : y$, மற்றும் 4 : 1. அதிக சுருதியின் அதிர்வெண் 360 Hz ஒரு வினாடியில் ஏற்படும் விம்மல்கள் 10 எனில் $x : y$ ன் மதிப்பு

(a) 36 : 35

(b) 35 : 36

(c) 1 : 1

(d) 1 : 2

11. கீழ்க்கண்டவற்றுள் எது அலையைக் குறிக்கிறது

(a) $(x - vt)^3$ (b) $x(x+vt)$

(c) $\frac{1}{(x+vt)}$ (d) $\sin(x+vt)$

12. ஊஞ்சல் ஒன்றில் உள்ள மனிதன், ஊஞ்சல் செங்குத்துக் கோட்டிலிருந்து 60° வரும்போது ஒரு விசிலை எழுப்புகிறான். அதன் அதிர்வெண் 2.0 k Hz. ஊஞ்சலின் நிலையான பிடிமானத்திலிருந்து விசில் 2 m ல் உள்ளது. ஊஞ்சலின் முன்னே வைக்கப்பட்ட ஒரு ஒலி உணர் கருவி இந்த ஒலியை உணர்கிறது. ஒலி உணர் கருவி உணரும் ஒலியின் பெரும அதிர்வெண்.

(a) 2.027 $kHz$ (b) 1.974 $kHz$

(c) 9.74 $kHz$ (d) 1.011 $kHz$

13. நேர்க்குறி $x$ திசையில் செல்லும் அலையின் வீச்சு $t = 0\,s$ ல் $y=\frac{1}{1+x^2}$ என்க. $t = 2\,s$ அதன் வீச்சு $y=\frac{1}{1+(x-2)^2}$ என அமைகிறது. அலையின் வடிவம் மாறவில்லையெனில், அலையின் திசைவேகம்

(a) 0.5m $s^{-1}$ (b) 1.0m $s^{-1}$

(c) 1.5m $s^{-1}$ (d) 2.0m $s^{-1}$

14. சீரான கயிறு ஒன்று m நிறையுடன் நிலையான அமைப்பிலிருந்து செங்குத்தாகத் தொங்குகிறது. கீழ்முனையில் ஒரு குறுக்கலை துடிப்பு ஏற்படுத்தப்படுகிறது. கீழ் முனையிலிருந்து இந்த துடிப்பு மேலேழும் வேக மாறுபாடு $(v)$ கீழிருந்து உயரம் $(h)$ யை பொருத்தது காட்டும் வரைபடம்




15. ஆர்கன் குழாய்கள் A , B யில் A ஒரு முனையில் மூடப்பட்டது. அது முதல் சீரிசையில் அதிர்வுறச் செய்யப்படுகிறது. குழாய் B இருபுறமும் திறந்துள்ளது. இது 3 வது சீரிசையில் அதிர்வுற்று A உடன் ஒரு இசைக்கவை மூலம் ஒத்திசைவு அடைகிறது. A மற்றும் B குழாயின் நீளங்களின் தகவு

a) $\frac{8}{3}$ b) $\frac{3}{8}$

c) $\frac{1}{6}$ d) $\frac{1}{3}$

## விடைகள்:

| | | | |
|---|---|---|---|
| 1) b | 2) d | 3) b | 4) a |
| 5) c | 6) a | 7) d | 8) c |
| 9) a | 10) a | 11) d | 12) a |
| 13) b | 14) d | 15) c | |



UNIT-11(XI-Physics_Vol-2)_Tamil.indd 283 10-09-2018 15:05:12

## II. சிறு வினாக்கள்

1. அலைகள் என்றால் என்ன?.
2. அலைகளின் வகைகளை எழுது.
3. குறுக்கலை என்றால் என்ன ? ஓர் எடுத்துக்காட்டு தருக.
4. நெட்டலை என்றால் என்ன? ஓர் எடுத்துக்காட்டு தருக.
5. அலைநீளம் வரையறு.
6. அலை ஒன்றின் அதிர்வெண், அலைநீளம், திசைவேகம் ஆகியவற்றிற்கிடையேயானத் தொடர்பை எழுதுக
7. அலைகளின் குறுக்கீட்டு விளைவு என்றால் என்ன?.
8. விம்மல்கள் – வரையறு.
9. ஒலியின் செறிவு, மற்றும் உரப்பு ஆகியவற்றை விளக்குக.
10. டாப்ளர் விளைவை விளக்குக.
11. டாப்ளர் விளைவில் சிவப்பு, மற்றும் நீல இடப்பெயர்ச்சிகளை விளக்குக.
12. ஒத்ததிர்வுக் காற்றுத் தம்ப கருவியில் முனைத்திருத்தம் என்றால் என்ன?
13. $y = x + a$. என்ற தொடர்பிற்கு படம் வரைக. அதை விளக்குக.
14. வாயு ஒன்றில் ஒலியின் திசைவேகத்தை பாதிக்கும் காரணிகளை எழுதுக.
15. எதிரொலி என்றால் என்ன ? விளக்குக.

## III. நெடு விடை வினாக்கள்

1. நீரின் மேற்பரப்பில் சுருள் வடிவில் மேடு, பள்ளங்கள் ஏற்படுவது ஏன் ?
2. முன்னேறு அலைக்கும், நிலை அலையின் இடையேயான வேறுபாடுகளை விவரி.
3. கம்பி ஒன்றில் ஏற்படும் முன்னேறு அலைக்கான திசை வேகத்திற்கான சமன்பாடு $v = \sqrt{\frac{T}{\mu}}$ என நிறுவுக.
4. காற்றில் ஒலியின் திசைவேகத்திற்கான நியூட்டன் சமன்பாட்டை விளக்குக. அதில் லாப்லஸின் திருத்தத்தை விவரி.
5. சமதளம் மற்றும் வளைவான பரப்புகளில் ஒலியின் எதிரொலிப்பு பற்றி குறிப்பு வரைக.
6. மேற்பொருந்துதல் தத்துவத்தை விளக்குக.
7. அலைகளில் குறுக்கீட்டு விளைவு ஏற்படுவதை விளக்குக.
8. விம்மல்கள் ஏற்படுவதை விளக்குக.
9. நிலை அலைகள் என்றால் என்ன ?. நிலை அலைகள் ஏற்படுவதை விளக்குக. அதன் பண்புகளை எழுதுக.
10. இழுத்துக்கட்டப்பட்ட கம்பியில் ஏற்படும் குறுக்கலைக்கான விதிகளை விளக்குக.
11. அடிப்படை அதிர்வெண், சீரிசை மற்றும் மேற்சுரம் ஆகியவற்றை விளக்குக.
12. சுரமானி என்றால் என்ன ?. அதன் அமைப்பு மற்றும் வேலை செய்யும் விதத்தை விவரி சுராமானியைப் பயன்படுத்தி இசைக்கவையின் அதிர்வெண்ணை எவ்வாறு அளப்பாய்?
13. ஒலியின் செறிவு, உரப்பு என்றால் என்ன? அவற்றைப்பற்றி விளக்குக.
14. கீழ்க்கண்டவற்றுள் மேற்சுரங்கள் ஏற்படுவதை விளக்குக.
    (a) மூடிய ஆர்கன் குழாய்
    (b) திறந்த ஆர்கன் குழாய்
    (c) ஒத்ததிர்வு காற்றுத்தம்பக் கருவி
15. ஒத்ததிர்வு தம்பக் கருவியைப் பயன்படுத்தி காற்றின் ஒலியின் திசைவேகத்தை அளக்கும் முறையை விளக்குக?.
16. டாப்ளர் விளைவு என்றால் என்ன?
    (1) மூலம் இயக்கத்திலும், கேட்பவர் ஓய்விலும்
        (a) மூலம், கேட்பவரை நோக்கி இயங்கும்போது
        (b) மூலம், கேட்பவரிலிருந்து விலகிச் செல்லும்போது



UNIT-11(XI-Physics_Vol-2)_Tamil.indd 284 10-09-2018 15:05:13

(2) கேட்பவர் இயக்கத்திலும், மூலம் ஓய்விலும்.

(a) கேட்பவர், மூலத்தை நோக்கி இயங்கும்போது

(b) கேட்பவர், மூலத்திலிருந்து விலகிச் செல்லும்போது

(3) இரண்டும் இயக்கத்தில்

(a) மூலமும், கேட்பவரும் ஒருவரை ஒருவர் நெருங்கும்போது

(b) மூலமும், கேட்பவரும் ஒருவரை விட்டு ஒருவர் விலகிச் செல்லும்போது

(c) மூலம், கேட்பவரைத் துரத்தும்போது

(d) கேட்பவர், மூலத்தை துரத்தும்போது

## IV. பயிற்சி கணக்குகள்

1. ஓர் ஊடகத்தில் ஒலியின் வேகம் 900 $ms^{-1}$. ஊடகத்தில் ஓர் புள்ளியில் 2 நிமிடங்களில் கடக்கும் அலைகளின் எண்ணிக்கை 3000 எனில் அலைநீளத்தைக் காண்க?.

**விடை : $\lambda$ = 36 m**

2. 2 மோல் ஹீலியம், 4 மோல் ஆக்சிஜன் கலந்த கலவையைக் கருதுக. இந்தக் கலவையில் 300 K வெப்ப நிலையில் ஒலியின் வேகத்தைக் காண்க.

**விடை : 400.9 $ms^{-1}$**

3. கடலில் ஒரு கப்பல் சோனார் (SONAR) மூலம் ஒலி அலைகளை கடலின் கீழ்நோக்கி அனுப்புகிறது. கடலின் அடி கட்டத்தில் உள்ள ஒரு பாறையில் இந்த ஒலி அலைகள் எதிரொலிக்கப்பட்டு 3.5 s ல் சோனாரை அடைகிறது. கப்பல் 100 km தொலைவைக் கடக்கும்போது மீண்டும் சைகைகளை கீழ்நோக்கிஅனுப்புகிறது. அந்த சைகைகள் 2s ல் எதிரொலித்து சோனாரை அடைகிறது. இரண்டு இடங்களிலும் ஆழங்களை கண்டு பிடித்து, அவற்றின் வேறுபாட்டைக் காண்க.

**விடை : $\Delta d$ = 1149.75 m**

4. படத்தில் காட்டப்பட்டுள்ளவாறு உள்ள குழாயில் ஒலி அலை கடந்து செல்கிறது– ஒலி அலை A ல் இரண்டு அலைகளாக பிரிகிறது, மீண்டும் B ல் ஒன்றாக சேர்கிறது. R என்பது அரை–வட்டத்தின் ஆரம். B இல் ஒன்றாக சேரும் அலைகள் முதல் சிறுமத்தை ஏற்படுத்தினால் R ன் மதிப்பைக் காண்க. ஒலியின் அலைநீளம் 50.0 m மீ என்க

**விடை : $R$ = 21.9 $m$**




5. N இசைக்கவைகள் அவற்றின் அதிர்வெண்களின் ஏறு வரிசையில் வைக்கப்பட்டுள்ளன. அவை அதிரும்போது அடுத்தடுத்த இரு இசைக்கவைகள் ஏற்படுத்தும் விம்மல்கள் n என்க. கடைசி இசைக்கவை, முதல் இசைக்கவையின் அதிர்வெண்ணைப்போல் இருமடங்கு அதிர்வெண் பெற்றுள்ளது, எனில் முதல் இசைக்கவையின் அதிர்வெண் $f = (N-1)n$. எனக் காட்டுக.

6. ஒலிமூலம் ஒன்று ஒலி அலையை உமிழ்கிறது. ஓர் புள்ளியில் இந்த அலையின் செறிவு (தொடக்கத்தில்) $I$ என்க. ஒலியின் வீச்சு இரு மடங்காக்கப்பட்டு, அதிர்வெண் நான்கில் ஒருபங்காக $\frac{1}{4}$ குறைக்கப்படுகிறது எனக் கருதுக. மேலே கூறிய அதே புள்ளியில் புதிய ஒலிச்செறிவைக் காண்க ?. விடை

**விடை : $I_{\text{புதியது}} \propto \frac{1}{4} I_{\text{பழையது}}$.**

7. சமநீளமுடைய இரு ஆர்கன் குழாய்களில் ஒன்று மூடியது, மற்றொன்று திறந்தது. மூடிய குழாயின் அடிப்படை அதிர்வெண் 250 Hz. திறந்த குழாயின் அடிப்படை அதிர்வெண்ணைக் காண்க.

**விடை 500Hz**



UNIT-11(XI-Physics_Vol-2)_Tamil.indd 285 10-09-2018 15:05:14

8. சைரன் வைக்கப்பட்ட காவல் வாகனத்தில் 20 $ms^{-1}$ திசைவேகத்தில் செல்லும் காவலர் (police), $v_o ms^{-1}$. வேகத்தில் கார் ஒன்றில் தப்பிச் செல்லும் திருடனைத்துரத்திச் செல்கிறார். காவல் வாகன சைரன் அதிர்வெண் 300Hz, இருவரும் நிலையாக இருந்து 400Hz அதிர்வெண் உடைய ஒலியை உமிழும் சைரன் நோக்கிச் செல்கிறார்கள் எனில் திருடனின் திசைவேகத்தைக் காண்.

**விடை** $v_{\text{திருடன்}} = 10\ m\,s^{-1}$

9. கீழ்க்கண்ட தொடர்புகளைக் கருதுக

(a) $y = x^2 + 2\,\alpha\, t\, x$

(b) $y = (x + vt)^2$

மேற்கண்டவற்றுள் எது அலையைக் குறிக்கிறது.

**விடை** (a) அலையைக் குறிக்கவில்லை

(b) அலைச்சமன்பாட்டுடன் பொருந்துவதால் அலையைக் குறிக்கிறது

## V. கருத்துரு வினாக்கள்

1. வாயுவில் குறுக்கலைகள் ஏற்படாது ஏன்? திண்மத்திலும், நீர்மத்திலும் குறுக்கலைகள் ஏற்படுமா?

2. நமது தேசிய விலங்கின் முழக்கம்அல்லது உறுமல் (roar) கொசு ஏற்படுத்தும் ஒலியிலிருந்து வேறுபடுகிறது. ஏன்?

3. மூலமும் கேட்பவரும் ஒய்வில் இருக்கும்போது, ஒரு வலிமையான காற்று வீசுகிறது. இதில் டாப்ளர் விளைவு உள்ளதா?

4. காலியான அறையில் ஒரு ஒலி உரப்பாகவும் (louder) அதே ஒலி தட்டு முட்டுப் பொருள்கள், இருக்கைகள் உள்ள அறையில் உரப்பு குறைவாகவும் இருக்க காரணம் என்ன?

5. சூறாவளி, கொந்தளிப்பு, புயல் ஆகியவை வரவிருப்பதை விலங்குகள் எவ்வாறு முன் கூட்டியே உணர்கின்றன?

6. நீர்வரும் திறந்த குழாயின் அடியில் வைக்கப்பட்ட பாத்திரம் ஒன்று நிரம்ப இருப்பதை எவ்வாறு சற்று முன்னரே அறிய முடியுமா ? காரணம் தருக?

## மேற்கோள் நூல்கள் (BOOKS FOR REFERENCE)


1. Vibrations and Waves – A. P. French, CBS publisher and Distributors Pvt. Ltd.
2. Concepts of Physics – H. C. Verma, Volume 1 and Volume 2, Bharati Bhawan Publisher
3. Halliday, Resnick and Walker, Fundamentals of Physics, Wiley Publishers, $10^{th}$ edition
4. Serway and Jewett, Physics for scientist and engineers with modern physics, Brook/Coole publishers, Eighth edition

## இணையச் செயல்பாடு

# அலை இயக்கம்

அலை இயக்கம் பற்றி அறிவோமா!



### படிகள்

- கீழ்க்காணும் உரலி / விரைவுக் குறியீட்டைப் பயன்படுத்தி "waves on a string" என்ற இணையப் பக்கத்திற்குச் சென்று 'Play' பொத்தானை அழுத்தவும்.
- இச்செயல்பாட்டு பக்கத்தில் ஒரு கோவை (string) படம் கொடுக்கப்பட்டிருக்கும். அலை இயக்கத்தைக் காண 'Play' வைஅழுத்தவும்.
- மேல் இடப்பக்கத்தில் உள்ள 'oscillations' மற்றும் 'pulse' போன்றவற்றைத் தெரிவு செய்தும், கீழே கொடுக்கப்பட்டுள்ள 'amplitude' மற்றும் 'frequency' என்பதை மாற்றியும் கோவையில் மாற்றங்களைக் காணலாம்
- மேல் வலப்பக்கத்தில் உள்ள சாளரத்தில் 'End types' என்பதைத் தெரிவு செய்து இதை மீண்டும் செய்யவும்.

படி 1



படி 2



படி 3



படி 4



**உரலி:**

https://phet.colorado.edu/en/simulation/wave-on-a-string

*படங்கள் அடையாளத்திற்கு மட்டும்.

* தேவையெனில் Flash Player or Java Script அனுமதிக்க.

B126_11_PHY_TM



UNIT-11(XI-Physics_Vol-2)_Tamil.indd 287 10-09-2018 15:05:17

UNIT-11(XI-Physics_Vol-2)_Tamil.indd 288 10-09-2018 15:05:17

# மேனிலை முதலாம் ஆண்டு

# இயற்பியல்

# செய்முறை

## செய்முறைகளின் பட்டியல்

1. தெரிந்த நிறை கொண்ட ஒரு திண்மக் கோளத்தின் நிலைமத் திருப்புத்திறனை வெர்னியர் அளவியைப் பயன்படுத்திக் காணல்.

2 சீரற்ற வளைவு – ஊசி மற்றும் நுண்ணோக்கியைப் பயன்படுத்தி பளுவிற்கும் இறக்கத்திற்கும் இடையேயான தொடர்பைச் சரிபார்த்தல்.

3. சுருள்வில்லின் சுருள் மாறிலியைக் காணல்.

4 தனிஊசலைப் பயன்படுத்தி புவிஈர்ப்பு முடுக்கம் காணல்.

5. ஒத்ததிர்வு காற்றுத் தம்பத்தை பயன்படுத்தி காற்றில் ஒலியின் திசைவேகம் காணல்.

6. திரவத்தின் பாகுநிலையைக் காணல் (ஸ்டோக்ஸ் முறை).

7. நுண்புழை ஏற்ற முறையில் பரப்பு இழுவிசை காணல்.

8. கலோரிமானியைக் கொண்டு நியூட்டனின் குளிர்வு விதியை சரிபார்த்தல்.

9. மாறா இழுவிசையில் அதிர்வெண்ணிற்கும் கொடுக்கப்பட்ட கம்பியின் அதிர்வடையும் நீளத்திற்கும் இடையேயான தொடர்பை அறிதல் – சுரமானி.

10. சுரமானியைப் பயன்படுத்தி மாறா அதிர்வெண்ணிற்கு கொடுக்கப்பட்ட கம்பியின் அதிர்வடையும் பிரிவின் நீளத்திற்கும் இழுவிசைக்கும் இடையேயான தொடர்பை அறிதல்.

11. விசைகளின் இணைகர விதியை சரிபார்த்தல் (செய்து காட்டல் மட்டுமே தேர்விற்கு உரியதன்று).

12. திருகு அளவி மற்றும் இயற்பியல் தராசினைக் கொண்டு கம்பிப் பொருளின் அடர்த்தியைக் காணல் (செய்து காட்டல் மட்டுமே தேர்விற்கு உரியதன்று).

குறிப்பு: ஒவ்வொரு அலகின் இறுதியிலும் வடிவமைக்கப்பட்டுள்ள இணையவழிச் செயல்பாடுகளை செய்து பார்க்க மாணவர்களை வலியுறுத்த வேண்டும். (செய்து காட்டல் மட்டுமே தேர்விற்கு உரியதன்று).

KH36JH



UNIT-12(XI-Physics_Vol-2) PRACTICAL FIRST YEAR.indd 290 10-09-2018 15:08:44

## 1. தெரிந்த நிறை கொண்ட ஒரு திண்மக் கோளத்தின் நிலைமத் திருப்புத்திறனை வெர்னியர் அளவியைப் பயன்படுத்திக் காணல்

**நோக்கம்** வெர்னியர் அளவியைப் பயன்படுத்தி நிறை தெரிந்த ஒரு திண்மக் கோளத்தின் நிலைமத் திருப்புத்திறனைக் கணக்கிடல்.

**தேவையான கருவிகள்** வெர்னியர் அளவி, திண்மக் கோளம்.

**வாய்ப்பாடு** ஒரு திண்மக் கோளத்தின் விட்டத்தைப் பற்றிய நிலைமத் திருப்புத்திறன்

$$I_d = \frac{2}{5} MR^2 \text{ kg m}^2$$

இங்கு M → கோளத்தின் நிறை (kg) (தெரிந்த மதிப்பு கொடுக்கப்பட வேண்டும்)

R → கோளத்தின் ஆரம் (m)

**விளக்கப்படம்**



வெர்னியர் அளவி




(a) சுழி பிழை

(b) நேர்பிழை +0.03 cm

(c) எதிர்பிழை –0.06 cm



(d) வெர்னியர் அளவீடு

**மாதிரி அளவீடு**

MSR = 2.2 cm ; VSC = 4 பிரிவுகள்;

அளவீடு = [2.2 cm +(4x0.01 cm )] = 2.24 cm

**செய்முறை**

- வெர்னியர் அளவியின் சுழிப்பிழைகள் கண்டறியப்பட வேண்டும். பிழைகள் இருப்பின் குறித்துக் கொள்ளவேண்டும்.
- கோளமானது வெர்னியர் அளவியின் இரு புயங்களுக்கு இடையில் பொருத்தப்பட்டு முதன்மைக் கோல் அளவு (மு.கோ.அ ) குறித்துக் கொள்ளப்படுகிறது.
- எந்த வெர்னியர் கோல் பிரிவு(வெ.கோ.பி) முதன்மைக்கோல் அளவுடன் சரியாக பொருந்தியுள்ளது என்பதைக் குறித்துக் கொண்டு இந்த வெ.கோ. பிரிவுடன் சுழித்திருத்தத்தை மேற்கொண்டால் அது சரியான வெர்னியர் கோல் அளவைத் தருகிறது. ( வெ.கோ.அ)
- இந்த வெர்னியர் கோல் அளவு மீச்சிற்றளவால் (LC) பெருக்கப்பட்டு முதன்மைக்கோல் அளவுடன் கூட்டப்படுகிறது. இந்த மதிப்பு கோளத்தின் விட்டமாகும்.
- கோளத்தின் வெவ்வேறு நிலைகளுக்கு விட்டம் உற்றுநோக்கப்பட்டு அட்டவணையில் குறித்து அதன் சராசரி விட்டம் கண்டறியப்படுகிறது. இதிலிருந்து கோளத்தின் ஆரம் (R) கணக்கிடப்படுகிறது.
- கோளத்தின் தெரிந்த நிறையின் மதிப்பு M மற்றும் கணக்கிடப்பட்ட கோளத்தின் ஆரம் R ஆகியவற்றைப் பயன்படுத்தி கொடுக்கப்பட்ட வாய்ப்பாட்டின் மூலம் அதன் விட்டத்தின் வழியேச் செல்லக்கூடிய அச்சைப் பொருத்துள்ள நிலைமத்திருப்புத்திறனைக் கணக்கிடலாம் .

**மீச்சிற்றளவு ( LC )**

ஒரு முதன்மைக்கோல் பிரிவு ( MSD ) = ............... cm

வெர்னியர் கோல் பிரிவுகளின் எண்ணிக்கை = ......

மீச்சிற்றளவு (LC) = $\dfrac{\text{1 முதன்மைக்கோல் பிரிவு (MSD)}}{\text{மொத்த வெர்னியர் பிரிவுகளின் எண்ணிக்கை}}$

= .............. cm

**காட்சிப்பதிவுகள்**

சுழிப்பிழை =

சுழித்திருத்தம் =

| வ.எண். | (மு.கோ.அ) cm | வெ.கோ.பி VSD | சரியான வெர்னியர் பொருந்துகை வெ.கோ.அ = (வெ.கோ.பி ± சுழித்திருத்தம் ) | கோளத்தின் விட்டம் = 2R = [மு.கோ.அ + வெ.கோ.அ x மீச்சிற்றளவு (LC)] cm |
|---|---|---|---|---|
| 1<br>2<br>3<br>4<br>5<br>6 | | | | |

**சராசரி 2R =** ........... cm

**கோளத்தின் ஆரம்** R = ........... cm

R = ........... m

**கணக்கீடு**

கோளத்தின் நிறை M = . . . . . . . . . . . . . kg

(கொடுக்கப்பட்ட தெரிந்த மதிப்பு )

கோளத்தின் ஆரம் R =. . . . . . . . . . . . . m

திண்மக்கோளத்தின் விட்டம் வழியே செல்லக்கூடிய

அச்சைப் பொருத்து உள்ள நிலைமத்திருப்புத்திறன் $I_d = \frac{2}{5} MR^2$ = . . . . . . . . . . . . . kg $m^2$

**முடிவு**

வெர்னியர் அளவியைப் பயன்படுத்தி கொடுக்கப்பட்ட திண்மக்கோளத்தின் விட்டம் வழியே செல்லக்கூடிய அச்சைப் பொருத்து உள்ள நிலைமத்திருப்புத்திறன். $I_d$ = ……………………….. kg $m^2$

## 2. சீரற்ற வளைவு – ஊசி மற்றும் நுண்ணோக்கியைப் பயன்படுத்தி பளுவிற்கும் இறக்கத்திற்கும் இடையேயான தொடர்பைச் சரிபார்த்தல்.

**நோக்கம்** ஒரு சட்டத்தின் சீரற்ற வளைவைப் பயன்படுத்தி பளு மற்றும் இறக்கத்திற்கிடையேயான தொடர்பைச் சரிபார்த்தல்

**தேவையான கருவிகள்** ஒரு நீண்ட சீரான சட்டம் [மீட்டர் அளவுகோல்] இரு கத்தி விளிம்புத் தாங்கிகள், நிறைத் தாங்கி, நிறைகள், ஊசி, வெர்னியர் நுண்ணோக்கி.

**வாய்ப்பாடு** $\frac{M}{s}$ = மாறிலி

இங்கு M → தொங்கவிடப்பட்ட பளு (நிறை) (kg)

s → கொடுக்கப்பட்ட பளுவிற்கான இறக்கம் (m)

**விளக்கப்படம்**




**சீரற்ற வளைவிற்கான ஊசி மற்றும் நுண்ணோக்கியின் சோதனை அமைப்பு**

**செய்முறை**

- இரு கத்தி விளிம்புகளையும் மேஜையின் மீது வைக்கவேண்டும்.
- சீரான சட்டத்தை (மீட்டர் அளவு கோலை) கத்தி விளிம்புகளின் மேற்பகுதியில் வைக்க வேண்டும்
- நிறைத்தாங்கியை அளவுகோலின் மையத்தில் தொங்கவிட வேண்டும். தாங்கி தொங்கிவிடப்பட்டுள்ள, அளவுகோலின் மையத்தில் ஒரு ஊசியைப் பொருத்த வேண்டும்.



UNIT-12(XI-Physics_Vol-2) PRACTICAL FIRST YEAR.indd 294 10-09-2018 15:08:46

- இந்த அமைப்பின் முன்னே ஒரு வெர்னியர் நுண்ணோக்கியை வைக்கவேண்டும்.
- நுண்ணோக்கியை சரிசெய்து, ஊசியின் தெளிவான பிம்பத்தைப் பெறவேண்டும். நுண்ணோக்கியின் கிடைத்தளக் குறுக்குக்கம்பி ஊசி முனையுடன் பொருந்துமாறு செய்ய வேண்டும் .(இங்கு நிறைதாங்கியானது நிலைப் பளு (Dead Load) M ஆகும்).
- நுண்ணோக்கியின் செங்குத்து அளவுகோலின் அளவீடுகளை குறித்துக்கொள்ள வேண்டும்.
- நிறைத்தாங்கியில் 0.05 kg (50 gm) நிறைகளை ஒன்றன் பின் ஒன்றாக அதிகரித்து அளவீடுகளைக் குறித்துக் கொள்ளவேண்டும்.
- பிறகு நிறைத்தாங்கியில் இருந்த நிறைகளை ஒன்றன் பின் ஒன்றாக குறைத்து அளவீடுகளை குறித்துக்கொள்ள வேண்டும்.
- ஒவ்வொரு பளுவிற்குமான சராசரி அளவீட்டை நிலைப்பளு அளவீட்டுடன் கழிக்கவேண்டும். இந்த அளவு குறிப்பிட்ட நிறை M – இற்கான இறக்கமாகும்.

**அட்டவணை 1 : M/s காணல்**

| பளு (kg) | நுண்ணோக்கி அளவீடு (m) | | | நிறை M (kg) கான இறக்கம் (s) | $M/s$ kg m$^{-1}$ |
|---|---|---|---|---|---|
| | பளு ஏற்றத்தின் போது | பளு இறக்கத்தின் போது | சராசரி | | |
| M | | | | | |
| M + 0.05 | | | | | |
| M + 0.10 | | | | | |
| M + 0.15 | | | | | |
| M + 0.20 | | | | | |
| M + 0.25 | | | | | |
| | | | | **சராசரி =** | |

**மாதிரி வரைபடம்**

பளு (M) மற்றும் இறக்கம் (s) ஆகியவற்றுக்கு இடையான தொடர்பு

M ஆனது x – அச்சிலும் s ஆனது y – அச்சிலும் எடுத்துக்கொள்ளப்பட்டு M மற்றும் s– க்கான வரைபடம் வரைய வேண்டும். இவ்வரைபடம் ஒரு நேர்கோடாகும்.



UNIT-12(XI-Physics_Vol-2) PRACTICAL FIRST YEAR.indd 295 10-09-2018 15:08:46




**நிறை மற்றும் இறக்கத்திற்கிடையேயான தொடர்பு**

**கணக்கீடு**

(i) $\frac{M}{s} =$

(ii) $\frac{M}{s} =$

(iii) $\frac{M}{s} =$

(iv) $\frac{M}{s} =$

(v) $\frac{M}{s} =$

**முடிவு**

- ஒவ்வொரு பளுவிற்கும் (நிறை) மற்றும் இறக்கத்திற்கு இடையே உள்ள தகவு கணக்கிடப்பட்டது. இதன் மதிப்பு ஒரு மாறிலியாக உள்ளது கண்டறியப்பட்டது.
- எனவே பளுவிற்கும் இறக்கத்திற்கிடையேயான தொடர்பு ஒரு சட்டத்தின் சீரற்ற வளைவைப் பயன்படுத்தி சரிபார்க்கப்பட்டது.



UNIT-12(XI-Physics_Vol-2) PRACTICAL FIRST YEAR.indd 296 10-09-2018 15:08:46

## 3. சுருள்வில்லின் சுருள் மாறிலியைக் காணல்

| | |
|---|---|
| நோக்கம் | ஒரு சுருள்வில்லின் சுருள் மாறிலியை செங்குத்து அலைவுகள் மூலம் கணக்கிடல் |
| தேவையான கருவிகள் | சுருள்வில், தாங்கி, கொக்கி, 50 கிராம் நிறைத்தாங்கி, 50 கிராம் கொண்ட நிறைக்கற்கள், நிறுத்துக் கடிகாரம், மீட்டர் அளவுகோல், குறிமுள். |
| வாயப்பாடு | சுருள்வில்லின் சுருள் மாறிலி $k = 4\pi^2 \left(\frac{M_2 - M_1}{T_2^2 - T_1^2}\right)$ kg s$^{-2}$ |

இங்கு $M_1, M_2 \rightarrow$ தெரிவு செய்யப்பட்ட நிறைகள் (kg)

$T_1, T_2 \rightarrow M_1, M_2$ நிறைகளுக்கான அலைவு காலங்கள் (s)

**விளக்கப்படம்**




**செய்முறை**

➢ மரத்தாங்கியில் உள்ள விறைப்பான பற்றுக்கருவியில் இருந்து ஒரு சுருள்வில்லின் மேல்முனை இறுக்கமாக பிணைக்கப்பட்டு செங்குத்தாக தொங்கவிடப்பட்டு அதன் மறுமுனையில் ஒரு நிறைத்தாங்கி இணைக்கப்படுகிறது. ஒரு குறிமுள் சுருள்வில்லின் கீழ்முனையில் இணைக்கப்பட்டு செங்குத்தாக பொருத்தப்பட்டு அளவுகோலில் நகரும் வண்ணம் அமைக்கப்படுகிறது.



UNIT-12(XI-Physics_Vol-2) PRACTICAL FIRST YEAR.indd 297 10-09-2018 15:08:47

- ஒரு குறிப்பிட்ட பளு M (எ.கா: 100 g) நிறைத்தாங்கியில் ஏற்றப்படுகிறது. மற்றும் குறிமுள்ளானது ஓய்வுநிலைக்கு வரும்போது அளவுகோலில் உள்ள அளவு குறித்துக்கொள்ளப்படுகிறது. இந்நிலை சமநிலை ஆகும்.
- நிறைத்தாங்கியில் உள்ள நிறை கீழ்நோக்கி இழுக்கப்பட்டு பின் விடப்படுகிறது. எனவே சுருள்வில்லானது சமநிலைப்புள்ளிக்கு இரு புறமும் செங்குத்தாக அலைவுறுகிறது.
- குறிமுள்ளானது சமநிலைப்புள்ளியை கடக்கும்போது ஒரு நிறுத்துக் கடிகாரம் இயக்கப்படுகிறது. மேலும் 10 அலைவுகளுக்கான நேரம் குறிக்கப்படுகிறது. பிறகு அலைவுக்காலம் T ஆனது கணக்கிடப்படுகிறது.
- நிறைத்தாங்கியில் படிப்படியாக 50 கிராம் நிறையை ஏற்றி இச்சோதனையானது மீண்டும் செய்யப்படுகிறது. ஒவ்வொரு நிகழ்விற்கும் அலைவுக்காலம் கணக்கிடப்படுகிறது.
- $M_1$ மற்றும் $M_2$ நிறைகளுக்கு (வேறுபாடு 50 கிராம் உள்ளபோது) $T_1$ மற்றும் $T_2$ என்பன முறையே அளவுக்காலங்கள் எனில் $\frac{M_2 - M_1}{T_2^2 - T_1^2}$ –இன் மதிப்பு கணக்கிடப்பட்டு அதன் சராசரி மதிப்பு கண்டறியப்படுகிறது.
- கொடுக்கப்பட்ட வாய்ப்பாட்டைப் பயன்படுத்தி சுருள்வில்லின் சுருள் மாறிலி கணக்கிடப்படுகிறது.

**காட்சிப்பதிவுகள்**

| வ.எண் | பளு M ( g ) | 10 அலைவுகளுக்கான நேரம் (s) | | | அலைவுநேரம் T ( s ) | $T^2$ ( $s^2$ ) | $\frac{M_2 - M_1}{T_2^2 - T_1^2}$ $g\ s^{-2}$ |
|---|---|---|---|---|---|---|---|
| | | முயற்சி 1 | முயற்சி 2 | சராசரி | | | |
| 1 | 100 | | | | | | |
| 2 | 150 | | | | | | |
| 3 | 200 | | | | | | |
| 4 | 250 | | | | | | |
| 5 | 300 | | | | | | |

சராசரி = . . . . . $g\ s^{-2}$

= . . . . . $kg\ s^{-2}$

**கணக்கீடு**

சுருள்வில்லின் சுருள்மாறிலி $K = 4\pi^2 \left(\frac{M_2 - M_1}{T_2^2 - T_1^2}\right)$

k = . . . . . . . . . . . . . . $kg\ s^{-2}$

**முடிவு**

கொடுக்கப்பட்ட சுருள்வில்லின் சுருள்மாறிலி k = . . . . . . . . . . . $kg\ s^{-2}$

# 4 தனிஊசலைப் பயன்படுத்தி புவிஈர்ப்பு முடுக்கம் காணல்

நோக்கம் தனிஊசலைப் பயன்படுத்தி புவிஈர்ப்பு முடுக்கத்தைக் கணக்கிடுதல்.

தேவையான கருவி தாங்கி, ஊசல்குண்டு, நூல், அளவுகோல், நிறுத்துக் கடிகாரம்

வாய்ப்பாடு புவிஈர்ப்பு முடுக்கம் $g = 4\pi^2\left(\frac{L}{T^2}\right)$ (m $s^{-2}$ )

இங்கு T → என்பது தனிஊசலின் அலைவுநேரம் (s)

g → என்பது புவிஈர்ப்பு முடுக்கம் (m $s^{-2}$ )

L → தனிஊசலின் நீளம் (m)

**விளக்கப்படம்**




**செய்முறை**

- ஒரு சிறிய பித்தளைக்குண்டினை நூலில் இணைக்கவும்.
- இந்த நூலானது தாங்கியுடன் பொருத்தப்படுகிறது.
- நூலின் மேற்பகுதியிருந்து ஊசல்குண்டின் மையப்பகுதிவரை உள்ள நீளம் அளவிடப்படுகிறது. கீழ்க்காணும் அட்டவணையில் ஊசலின் நீளமானது பதிவிடப்படுகிறது.
- நிறுத்துக் கடிகாரத்தைக் கொண்டு 10 அலைவுகளுக்கான நேரம் (t) குறிக்கப்படுகிறது.
- அலைவுக்காலம் $T = \frac{t}{10}$
- ஊசலின் வெவ்வேறு நீளங்களுக்கு (L) சோதனை மீண்டும் செய்யப்படுகிறது. கொடுக்கப்பட்ட வாய்ப்பாட்டினைப் பயன்படுத்தி புவிஈர்ப்பு முடுக்கம் (g) கண்டறியப்படுகிறது.



UNIT-12(XI-Physics_Vol-2) PRACTICAL FIRST YEAR.indd 299 10-09-2018 15:08:49

**காட்சிப்பதிவுகள்** புவிஈர்ப்பு முடுக்கம் 'g' ஐ க் கணக்கிடல்

| தனிஊசலின் நீளம் L (m) | 10 அலைவுகளுக்கான நேரம் (s) | | | அலைவுநேரம் $T = \frac{t}{10}$ (s) | $T^2$ ($s^2$) | $g = \frac{4\pi^2 L}{T^2}$ $m\ s^{-2}$ |
|---|---|---|---|---|---|---|
| | முயற்சி 1 | முயற்சி 2 | சராசரி | | | |
| | | | | | | |

**சராசரி** g = . . . $m\ s^{-2}$

**மாதிரி வரைபடம்**




$$\text{சரிவு} = \frac{\Delta y}{\Delta x} = \frac{T^2}{L} ; \frac{1}{\text{சரிவு}} = \frac{L}{T^2}$$

**முடிவு**

தனிஊசலைப் பயன்படுத்தி கண்டறியப்பட்ட புவிஈர்ப்பு முடுக்கத்தின் (g) மதிப்பு

i) கணக்கீட்டிலிருந்து = . . . . . . . . . $m\ s^{-2}$

ii) வரைபடத்திலிருந்து = . . . . . . . . . $m\ s^{-2}$



UNIT-12(XI-Physics_Vol-2) PRACTICAL FIRST YEAR.indd 300 10-09-2018 15:08:50

## 5. ஒத்ததிர்வு காற்றுத் தம்பத்தை பயன்படுத்தி காற்றில் ஒலியின் திசைவேகம் காணல்.

| | |
|---|---|
| நோக்கம் | ஒத்ததிர்வு காற்றுத்தம்பத்தைப் பயன்படுத்தி அறை வெப்பநிலையில் காற்றில் ஒலியின் திசைவேத்தைக் கண்டறிதல். |
| தேவையான கருவி | ஒத்ததிர்வுக்குழாய், அதிர்வெண் தெரிந்த மூன்று இசைக்கவைகள், இரப்பர் சுத்தியல் , வெப்பநிலைமானி குண்டு நூல், (plum line), நீர் உள்ள கொள்கலன். |
| வாய்ப்பாடு | $V = 2v\left(l_2 - l_1\right)$ m s$^{-1}$ |

இங்கு ; V $\rightarrow$ காற்றில் ஒலியின் திசைவேகம் (m s$^{-1}$)

$l_1, l_2 \rightarrow$ முதல் மற்றும் இரண்டாவது ஒத்ததிர்வு நீளங்கள்(m)

$v \rightarrow$ இசைக்கவையின் அதிர்வெண் (Hz)

**விளக்கப்படம்**




**செய்முறை**

- ஒத்ததிர்வுக் கருவியின் உள்குழாயானது குழாயினுள் காற்றுத்தம்பத்தின் நீளம் மிகவும் சிறியதாக இருக்குமாறு தாழ்த்தப்படுகிறது.
- அதிர்வெண் தெரிந்த ஓர் இசைக்கவையை எடுத்துக் கொண்டு இதனை ரப்பர் சுத்தியால் தட்டவேண்டும். இசைக்கவையானது அதன் இயல்பான அதிர்வெண்ணில் நெட்டலையை இப்பொழுது உருவாக்குகின்றது.
- குழாயின் மேற்புறத்தில் அதிர்வடையும் இசைக்கவையை வைக்கவேண்டும். ஒலி அலைகள் குழாயின் கீழ் வரை சென்று நீர்பரப்பினால் எதிரொலிப்பு அடைகிறது.
- இப்பொழுது குழாயின் அதிர்வு மட்டமானது இசைக்கவையின் பெரும் ஒலி கேட்கும் வரை உயர்த்தப்படுகிறது.

- இந்த நிலையில் திரவத்தம்ப உயரம் அளவிடப்படுகிறது. இந்த அளவு முதல் ஒத்ததிர்வு நீளம் $l_1$ ஆக எடுத்துக் கொள்ளப்படுகிறது.
- பிறகு முதல் ஒத்ததிர்வு நீளத்தின் இருமடங்கிற்கு குழாயானது தோராயமாக உயர்த்தப்படுகிறது. இசைக்கவையை சரியாக மறுபடியும் குழாயின் வாய்புறத்தில் வைக்கவேண்டும்.
- பெரும ஒலியானது கேட்கும் வரை குழாயின் உயரத்தை மாற்ற வேண்டும்.
- இந்நிலையில் காற்றுத்தம்பத்தின் நீளத்தை அளவிட வேண்டும். இந்த அளவு இரண்டாவது ஒத்ததிர்வு நீளம் $l_2$ஆகும். $V = 2\nu(l_2 - l_1)$ என்ற தொடர்பைப் பயன்படுத்தி அறை வெப்பநிலையில் காற்றில் ஒலியின் திசைவேகத்தைக் கணக்கிடலாம் .
- வெவ்வேறு அதிர்வெண்கள் கொண்ட இசைக்கவைகளைப் பயன்படுத்தி சோதனையை மீண்டும் செய்து திசைவேகத்தைக் கணக்கிட வேண்டும் .
- கணக்கிடப்பட்ட மதிப்புகளின் சராசரி அறைவெப்பநிலையில் காற்றில் ஒலியின் திசைவேகத்தினைத் தரும்.

**காட்சிப்பதிவுகள்**

| வ. எண். | இசைக் கவையின் அதிர்வெண் $\nu$ (Hz) | முதல் ஒத்ததிர்வு நீளம் $l_1(cm)$ | | | இரண்டாவது ஒத்த–திர்வு நீளம் $l_2(cm)$ | | | $l_2 - l_1$ $(\times 10^{-2} m)$ | ஒலியின் திசைவேகம் $V = 2\nu(l_2 - l_1)$ (m s$^{-1}$) |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | முயற்சி 1 | முயற்சி 2 | சராசரி | முயற்சி 1 | முயற்சி 2 | சராசரி | | |
| 1 | | | | | | | | | |
| 2 | | | | | | | | | |
| 3 | | | | | | | | | |
| | | | | | | | | சராசரி V = | |

**கணக்கீடு**

அறைவெப்பநிலை, t = _____________ ° C

அறைவெப்பநிலையில் காற்றில் ஒலியின் திசைவேகம், $V = 2\nu(l_2 - l_1)$ = _____________ m s$^{-1}$

**முடிவு**

அறைவெப்பநிலையில் காற்றில் ஒலியின் திசைவேகம், (V) = _____________ m s$^{-1}$



UNIT-12(XI-Physics_Vol-2) PRACTICAL FIRST YEAR.indd 302 10-09-2018 15:08:51

## 6. திரவத்தின் பாகுநிலையைக் காணல் (ஸ்டோக்ஸ் முறை)

நோக்கம் ஸ்டோக்ஸ் முறையில் கொடுக்கப்பட்ட திரவத்தின் பாகியல் எண்ணைக் கணக்கிடுதல்.

தேவையான கருவிகள் நீண்ட உருளை வடிவ கண்ணாடி ஜாடி, அதிக பாகுநிலை கொண்ட திரவம், மீட்டர் அளவுகோல், கோளவடிவக் குண்டு, நிறுத்துக்கடிகாரம் ,நூல்

வாய்ப்பாடு

$$\eta = \frac{2r^2(\delta - \sigma)g}{9V} \text{ N s m}^{-2}$$

இங்கு η − திரவத்தின் பாகியல் எண் ($N\,s\,m^{-2}$)

$r \rightarrow$ கோளவடிவ குண்டின் ஆரம் ( m )

$\delta \rightarrow$ எ ஃகு கோளத்தின் அடர்த்தி ( $kg\,m^{-3}$ )

$\sigma \rightarrow$ திரவத்தின் அடர்த்தி ( $kg\,m^{-3}$ )

$g \rightarrow$ புவியீர்ப்பு முடுக்கம் (9.8 $m\,s^{-2}$ )

$V \rightarrow$ சராசரி முற்றுத்திசைவேகம் ( $m\,s^{-1}$ )

**விளக்கப்படம்**




**ஸ்டோக்ஸ் முறையில் பாகுநிலையை அளவிடுவதற்கான சோதனை அமைப்பு**

**செய்முறை**

- அளவீடுகள் குறிக்கப்பட்ட நீண்ட உருளை வடிவ கண்ணாடி ஜாடி ஒன்றினை எடுத்து அதனுள் கொடுக்கப்பட்ட திரவத்தை நிரப்பவேண்டும்.
- A,B என்ற இரு புள்ளிகள் கண்ணாடி ஜாடியில் குறிக்கப்படுகிறது. உலோகக் குண்டானது Aயை அடையும்போது அது முற்றுத் திசைவேகத்தைப் பெறும் வகையில் புள்ளி A திரவத்தின் பரப்பிற்கு அதிக ஆழத்தில் குறிக்கப்படவேண்டும்.
- திருகு அளவி கொண்டு, கோளவடிவ உலோகக்குண்டின் ஆரத்தைக் கணக்கிட வேண்டும்.
- கோளவடிவக்குண்டாது திரவத்தில் மெதுவாக விழச்செய்யப்பட வேண்டும்.
- கோளமானது புள்ளி A–யை கடக்கும் போது ஓர் நிறுத்துக்கடிகாரத்தை இயக்கவேண்டும். கோளமானது புள்ளி B–யை கடக்கும் போது நிறுத்துக் கடிகாரத்தை நிறுத்த வேண்டும். A மற்றும் B –க்கு இடையேயான தொலைவை அளந்து முற்றுத்திசைவேகத்தைக் கணக்கிட வேண்டும் .
- A மற்றும் B–க்கு இடையேயான வெவ்வேறு தொலைவுகளுக்கு சோதனை திரும்பச் செய்யப்படவேண்டும். புள்ளி Aயானது கண்டிப்பாக முற்றுத்திசைவேகத்தை அடையும் நிலைக்கு கீழே குறிக்கப்படுவதை உறுதிப்படுத்த வேண்டும்.

**காட்சிப்பதிவுகள்**

முற்றுத் திசைவேகத்தைக் காணல்

| வ. எண். | கோளவடிவக் குண்டு கடந்த தொலைவு (m) | எடுத்துக்கொண்ட காலம் (t) (s) | முற்றுத்திசைவேகம் (V) $d/t$ (m s⁻¹) |
|---|---|---|---|
| | | | |
| | | | |
| | | | |
| | | **சராசரி=** | |

**கணக்கீடு**

கோளவடிவ உலோகக் குண்டின் அடர்த்தி δ = ________ $kg\,m^{-3}$

கொடுக்கப்பட்ட திரவத்தின் அடர்த்தி σ = ________ $kg\,m^{-3}$

கோளத்தின் ஆரம் r_________ m

திரவத்தின் பாகியல் எண் $\eta = \frac{2r^2 g(\delta - \sigma)}{9V}$ = ________ $N\,s\,m^{-2}$

**முடிவு**

ஸ்டோக்ஸ் முறையில் கொடுக்கப்பட்ட திரவத்தின் பாகியல் எண் η = ________ $N\,s\,m^{-2}$



UNIT-12(XI-Physics_Vol-2) PRACTICAL FIRST YEAR.indd 304 10-09-2018 15:08:53

# 7. நுண்புழை ஏற்ற முறையில் பரப்பு இழுவிசை காணல்

நோக்கம் நுண்புழை ஏற்ற முறையில் ஒரு திரவத்தின் பரப்பு இழுவிசையைக் கணக்கிடுதல்

தேவையான கருவிகள் நீர் உள்ள முகவை, நுண்புழைக்குழாய், வெர்னியர் நுண்ணோக்கி, துளையிடப்பட்ட இரப்பர் அடைப்பான் நீண்ட பின்னலூசி, ஓர் குட்டையான இரப்பர் குழாய் மற்றும் பற்றுக்கருவி

வாய்ப்பாடு திரவத்தின் பரப்பு இழுவிசை $T = \frac{hr\sigma g}{2}$ $N\,m^{-1}$

இங்கு $T \rightarrow$ திரவத்தின் பரப்புஇழுவிசை $(N\,m^{-1})$

$h \rightarrow$ நுண்புழைக்குழாயில் திரவத்தின் உயரம் (m)

$r \rightarrow$ நுண்புழைக்குழாயின் ஆரம் $(m)$

$\sigma \rightarrow$ நீரின் அடர்த்தி $(\sigma = 1000\ kg\,m^{-3})$

$g \rightarrow$ புவியீர்ப்பு முடுக்கம் $(g = 9.8\ m\,s^{-2})$

**விளக்கப்படம்**




நுண்புழை ஏற்றமுறையில் பரப்பு இழுவிசை காணும் சோதனை அமைப்பு

**செய்முறை**

- ஒரு தூய்மையான மற்றும் உலர்ந்த நுண்புழைக்குழாய் ஒரு தாங்கியில் பொருத்தப்படுகிறது.
- ஒரு நீர்நிரம்பியுள்ள முகவை சரி செய்யக்கூடிய மேடையில் சிறிய அளவிலான நீர் குழாயினுள் உயரும் வகையில் வைக்கப்படுகிறது. எனவே திரவத்தின் பரப்பை தொடுமாறு நுண்புழைக்குழாயின் அருகில் ஊசியை பொருத்தவேண்டும்.
- வெர்னியர் நுண்ணோக்கியால் நீரின் பிறைத்தளம் நோக்கப்படுகிறது. பிறைத்தள மட்டமானது குறுக்குக்கம்பியுடன் பொருந்தும் நிலையில் அளவீடு எடுத்துக்கொள்ளப்படுகிறது.



UNIT-12(XI-Physics_Vol-2) PRACTICAL FIRST YEAR.indd 305 10-09-2018 15:08:53

- வெர்னியர் நுண்ணோக்கியால் ஊசியின் முனை நோக்கப்பட்டு மீண்டும் அளவீடு குறிக்கப்படுகிறது.
- செங்குத்து அளவு கோலின் இரு அளவீடுகளுக்கான வேறுபாடு நுண்புழைக்குழாயில் மேலேறிய நீர்மத்தின் உயரம் h ஆகும்.
- நுண்புழைக்குழாயின் ஆரத்தைக் கணக்கிட நகரும் மேடையின் உயரத்தை தாழ்த்தி முகவையானது அகற்றப்படவேண்டும். நுண்புழைக்குழாயைக் கவனமாக சுழற்றி மூழ்கியிருந்த கீழ்முனைப்பகுதி உங்களை நோக்கி இருக்குமாறு செய்யவேண்டும்.
- வெர்னியர் நுண்ணோக்கியால் குழாயானது நோக்கப்பட்டு குழாயின் உட்சுவர் தெளிவாகத் தெரியும்படி சரி செய்யப்படுகிறது.
- குழாயின் இடப்புற உட்சுவர் வெர்னியர் நுண்ணோக்கியின் செங்குத்துக் குறுக்கு கம்பியுடன் பொருந்துமாறு சரி செய்யப்படுகிறது. இந்த அளவு $L_1$ என குறித்துக் கொள்ளப்படுகிறது.
- நுண்ணோக்கியின் திருகுகளைத் திருகி கிடைத்தளத்திசையில் நகர்த்தி குழாயின் வலப்புற உட்சுவர் நோக்கப்படுகிறது. இதன் அளவு $R_1$ குறித்துக் கொள்ளப்படுகிறது. எனவே குழாயின் ஆரத்தை $\frac{1}{2}(L_1 - R_1)$ என்ற வாய்ப்பாட்டின் மூலம் கணக்கிடலாம்.
- இறுதியாக கொடுக்கப்பட்ட வாய்ப்பாட்டைப் பயன்படுத்தி பரப்பு இழுவிசை கணக்கிடப்படுகிறது.



நுண்புழைக்குழாயின் ஆரம்

**காட்சிப்பதிவுகள்**

திரவத்தின் உயரத்தைக் காணல் 'h'

நுண்ணோக்கியின் மீச்சிற்றளவு = ________ $\times 0.001 cm$

| வ.எண் | திரவத்தின் பிறைத்தளத்தில் நுண்ணோக்கி அளவீடு | | | குறிமுள்ளின் கீழ் முனைக்கான நுண்ணோக்கி அளவீடு | | | திரவத்தின் உயரம் h (cm) |
|---|---|---|---|---|---|---|---|
| | MSR | VSR | TR (cm) | MSR | VSR | TR (cm) | |
| | | | | | | | |
| | | | | | | **சராசரி** h = | |

நுண்புழைக்குழாயின் ஆரம்

| குழாய் | குழாயின் இடப்புற உட்சுவர் நிலைக்கான வெர்னியர் அளவீடு $L_1$ | | | குழாயின் வலப்புற உட்சுவர் நிலைக்கான வெர்னியர் அளவீடு $R_1$ | | | நுண்புழைக் குழாயின் ஆரம் $r = \frac{1}{2}(L_1 - R_1)$ (cm) |
|---|---|---|---|---|---|---|---|
| | MSR | VSR | TR (cm) | MSR | VSR | TR (cm) | |
| | | | | | | | |

**கணக்கீடு**

நுண்புழைக்குழாயினுள் திரவத்தின் சராசரி உயரம் h = __________ cm

__________ m

நுண்புழைக்குழாயின் விட்டம் 2r = __________ cm

நுண்புழைக்குழாயின் ஆரம் r = __________ m

நீரின் அடர்த்தி $\sigma = 1000\ kg\ m^{-3}$

புவிஈர்ப்பு முடுக்கம் $g = 9.8\ m\ s^{-2}$

பரப்பு இழுவிசை $T = \frac{hrdg}{2}$

= __________ $N\ m^{-1}$

**முடிவு**

நுண்புழை ஏற்றமுறையில் கொடுக்கப்பட்ட திரவத்தின் பரப்பு இழுவிசை T = __________ $N\ m^{-1}$

## 8. கலோரிமானியைக் கொண்டு நியூட்டனின் குளிர்வு விதியை சரிபார்த்தல்

| | |
|---|---|
| நோக்கம் | வெப்பப்படுத்தப்பட்ட பொருளின் வெப்பநிலைக்கும் நேரத்திற்கும் இடையேயான தொடர்பினைப் பெறுதல். |
| தேவையான கருவிகள் | கலக்கியுடன் கூடிய ஒரு கலோரிமானி, ஒரு துளையிடப்பட்ட இரப்பர் தக்கை, வெப்பநிலைமானி, நிறுத்துக்கடிகாரம், சூடேற்றும் சாதனம், நீர் பற்றுக்கருவி மற்றும் தாங்கி |
| நியூட்டன் குளிர்வு விதி | உயர்வெப்பநிலையில் உள்ள ஒரு பொருள் வெப்பத்தை இழக்கும் வீதம் அப்பொருளுக்கும் சுற்றுப்புறச் சூழலுக்கும் இடையிலுள்ள வெப்பநிலை வேறுபாட்டிற்கு நேர்த்தகவில் இருக்கும். |

$$\frac{dT}{dt} \propto (T - T_0)$$

இங்கு $\frac{dT}{dt} \rightarrow$ வெப்பத்தை இழக்கும் வீதம் (குளிர்வு வீதம்) (°C)

$T \rightarrow$ நீரின் வெப்பநிலை(°C)

$T_0 \rightarrow$ அறை வெப்ப நிலை (°C)

**விளக்கப்படம்**



நியூட்டன் குளிர்வு விதி சோதனை அமைப்பு

**செய்முறை:**

- வெப்பநிலைமானியைப் பயன்படுத்தி அறைவெப்பநிலை ($T_o$) ஐ குறித்துக் கொள்ளவேண்டும்.
- ஏறத்தாழ 90°C வெப்பநிலையில் உள்ள சூடான நீர் கலோரிமானியில் நிரப்பப்படுகிறது.
- ஒரு துளை கொண்ட இரப்பர் தக்கையினால் கலோரிமானி மூடப்படுகிறது.
- தக்கையில் உள்ள துளையின் வழியாக கலோரிமானிக்குள் ஒரு வெப்பநிலைமானியை சொருக வேண்டும்.
- நிறுத்துக்கடிகாரத்தை இயக்கி, 80°C முதல் ஒவ்வொரு ஒரு டிகிரி செல்சியஸ் வெப்பநிலைக் குறைவிற்கும் ஆகும் நேரம் உற்றுநோக்கப்படுகிறது.



UNIT-12(XI-Physics_Vol-2) PRACTICAL FIRST YEAR.indd 308 10-09-2018 15:08:55

- அறைவெப்பநிலை வரும் வரை தேவையான அளவீடுகளைக் குறித்துக்கொள்ளவேண்டும்.
- அளவீடுகள் அட்டவணைப்படுத்தப்படுகிறது.
- நேரத்தை x அச்சிலும், மிகுதி வெப்பநிலையை y அச்சிலும் கொண்டு வரைபடம் வரையப்படுகிறது.

**மாதிரி வரைபடம்**




**வெப்பநிலை மற்றும் நேரத்திற்கு இடையேயான தொடர்பு காணல்**

அறைவெப்பநிலை ($T_0$) = ________°C

**காட்சிப்பதிவுகள்**

நேரத்தைப் பொருத்து வெப்பநிலை மாறும் வீதத்தினை அளவிடல்

| நேரம் (s) | நீரின் வெப்பநிலை (T) °C | மிகுதி வெப்பநிலை ($T - T_0$) °C |
|---|---|---|
| | | |

**முடிவு**

குளிர்வு வரைகோடு வரையப்பட்டு நியூட்டன் குளிர்வு விதி சரிபார்க்கப்பட்டது.

## 9. மாறா இழுவிசையில் அதிர்வெண்ணிற்கும் கொடுக்கப்பட்ட கம்பியின் அதிர்வடையும் நீளத்திற்கும் இடையேயான தொடர்பை அறிதல் – சுரமானி

| | |
|---|---|
| நோக்கம் | சுரமானியைப் பயன்படுத்தி, மாறாத இழுவிசையில் அதிர்வெண்ணிற்கும், கொடுக்கப்பட்ட கம்பியின் அதிர்வடையும் நீளத்திற்கும் இடையேயான தொடர்பை அறிதல். |
| தேவையான கருவிகள் | சுரமானி, அதிர்வெண் தெரிந்த ஆறு இசைக்கவைகள், மீட்டர் அளவுகோல், இரப்பர்அட்டை, சிறுகாகிதத் துண்டுகள், நிறைத்தாங்கி மற்றும் ½ kg நிறைக்கற்கள், கூரிய விளிம்புக்கட்டைகள். |
| வாய்ப்பாடு | அதிர்வடையும் கம்பியின் அடிப்படைச் சுரத்திற்கான அதிர்வெண் |

$$n = \frac{1}{2l}\sqrt{\frac{T}{m}} \quad Hz$$

a) கொடுக்கப்பட்ட நிறை m மற்றும் நிலையான இழுவிசை T மதிப்பிற்கு

$n \propto \frac{1}{l}$ (அல்லது) nl = மாறிலி

இங்கு $n \rightarrow$ அதிர்வடையும் கம்பியின் அடிப்படைச் சுரத்திற்கான அதிர்வெண் (Hz)

$m \rightarrow$ கம்பியின் ஓரலகு நீளத்திற்கான நிறை ( kg m$^{-1}$ )

$l \rightarrow$ இரு விளிம்புகளுக்கு இடையேயான நீளம் ( m )

$T \rightarrow$ கம்பியின் இழுவிசை ( நிறைத்தாங்கியின் நிறையும் சேர்ந்தது) = Mg ( N )

$M \rightarrow$ தொங்கவிடப்பட்ட நிறை (நிறைத்தாங்கியின் நிறையும் சேர்ந்தது) ( Kg )

**விளக்கப்படம்**




**சுரமானியைப் பயன்படுத்தி மாறாத இழுவிசைக்கு கொடுக்கப்பட்ட கம்பியின் அதிர்வடையும் பிரிவின் நீளத்திற்கும், அதிர்வெண்ணிற்கும் இடையேயான தொடர்பைக் கண்டறிதல்**

**செய்முறை**

- சுரமானியினை ஒரு மேஜையின் மீது வைத்து அதனுடன் இணைக்கப்பட்ட கப்பியின் பள்ளம் தூய்மையாகவும், குறைந்த உராய்வில் உள்ளதையும் உறுதிசெய்க.
- தகுந்த நிறையினை நிறைத்தாங்கியில் இட்டு கம்பியை விறைப்பாக்கவேண்டும்.
- இசைக்கவையை இரப்பர் அட்டையில் தட்டி அதிர்வுறச்செய்ய வேண்டும்.
- சுரமானிக் கம்பியை அதிர்வுறச்செய்து இரு அதிர்வு ஒலிகளையும் ஒப்பிடுக.
- ஒலியானது சம அளவுகேட்கும் வரை விளிம்புக்கட்டை B யை நகர்த்தி கம்பியின் அதிர்வடையும் பிரிவின் நீளத்தை சரிசெய்யவேண்டும்.
- இறுதியாக சரி செய்தபிறகு ஒரு சிறிய காகிதத்துண்டை AB கம்பியின் மையத்தில் வைக்க வேண்டும்.
- இசைக்கவையை அதிர்வுறச்செய்து அதன் அடிப்பகுதியை விளிம்புக்கட்டை A யின் மீது வைத்து அல்லது சுரமானி பெட்டி மீது வைத்து விளிம்புக்கட்டை B யை நகர்த்தி ஒத்ததிர்வினால் காகிதத்துண்டை கிளர்ந்தெழச் செய்யவேண்டும்.
- மீட்டர் அளவுகோல் கொண்டு AB விளிம்புக்கட்டைகளுக்கு இடையேயான நீளம் அளவிடப்படுகிறது. இதுவே ஒத்ததிர்வு நீளமாகும். இப்பொழுது அதிர்வடையும் கம்பியின் அடிப்படைச்சுரத்தின் அதிர்வெண் இசைக்கவையின் அதிர்வெண்ணுக்குச் சமம்.
- மற்ற இசைக்கவைகளுக்கும் பளுவை மாறாமல் வைத்துக்கொண்டு சோதனையை மீண்டும் செய்ய வேண்டும்.

**காட்சிப்பதிவுகள்**

கம்பியின் இழுவிசை T = Mg = ________ N (மாறலி)

(நிறைத்தாங்கியின் நிறையுடன் சேர்த்து தொடங்கவிடப்பட்ட மொத்த நிறை M என்க.)

| நீளத்தைப் பொருத்து அதிர்வெண் மாறுபாடு | | |
|---|---|---|
| இசைக்கவையின் அதிர்வெண் n ( Hz ) | ஒத்ததிர்வு நீளம் $l$ | $nl$ |
| $n_1$ = | | |
| $n_2$ = | | |
| $n_3$ = | | |
| $n_4$ = | | |
| $n_5$ = | | |
| $n_6$ = | | |

### வரைபடம்




வரைபடம் 1 : அதிர்வெண்ணுக்கும் நீளத்திற்கும் இடையேயான தொடர்பு




வரைபடம் 2 : அதிர்வெண்ணிற்கும் நீளத்தின் தலைகீழிக்கும் இடையேயான தொடர்பு

### கணக்கீடு

அனைத்து இசைக்கவைகளின் n மற்றும் $l$ இன் பெருக்குத்தொகை ($nl$) மாறிலியாக இருக்கும் (அட்டவணையின் கடைசி பகுதி)

### முடிவு

- கொடுக்கப்பட்ட இழுவிசைக்கு கொடுக்கப்பட்ட விரைப்பான கம்பி ஒத்ததிர்வடையும் நீளம் அதிர்வெண்ணிற்கு எதிர்விகிதத்தில் இருக்கும் (அதாவது $n \propto \frac{1}{l}$)
- n –இன் பெருக்குத்தொகை மாறிலி மற்றும் அதன் கண்டறியப்பட்ட மதிப்பு ______ (Hz m)



UNIT-12(XI-Physics_Vol-2) PRACTICAL FIRST YEAR.indd 312 10-09-2018 15:08:57

## 10. சுரமானியைப் பயன்படுத்தி மாறா அதிர்வெண்ணிற்கு கொடுக்கப்பட்ட கம்பியின் அதிர்வடையும் பிரிவின் நீளத்திற்கும் இழுவிசைக்கும் இடையேயான தொடர்பை அறிதல்

**நோக்கம்** : சுரமானியைப் பயன்படுத்தி, மாறா அதிர்வெண்ணிற்கு கொடுக்கப்பட்ட கம்பியின் அதிர்வடையும் பிரிவின் நீளத்திற்கும் இழுவிசைக்கும் இடையேயான தொடர்பினை அறிதல்.

**தேவையான கருவிகள்** : சுரமானி, அதிர்வெண் தெரிந்த ஆறு இசைக்கவைகள், மீட்டர் அளவுகோல், இரப்பர்அட்டை, சிறுகாகிதத் துண்டுகள், எடைத்தாங்கி மற்றும் 0.5 kg எடைக்கற்கள், கூரிய விளிம்புக்கட்டைகள்.

**வாய்ப்பாடு** : அதிர்வடையும் கம்பியின் அடிப்படைச்சுரத்திற்கான அதிர்வெண்

$$n = \frac{1}{2l}\sqrt{\frac{T}{m}} \text{ Hz}$$

மாறா நிறைகொண்ட கொடுக்கப்பட்ட கம்பிக்கு n– என்பது மாறிலி எனில்

$$\frac{\sqrt{T}}{l} = \text{மாறிலி}$$

இங்கு $n \rightarrow$ அதிர்வடையும் கம்பியின் அடிப்படைச் சுரத்திற்கான அதிர்வெண் (Hz)

$m \rightarrow$ கம்பியின் ஓரலகு நீளத்திற்கான நிறை ( $kg\ m^{-1}$ )

$l \rightarrow$ இரு விளிம்புகளுக்கு இடையேயான நீளம் ( m )

$T \rightarrow$ கம்பியின் இழுவிசை (நிறைத்தாங்கியின் நிறையும் சேர்ந்தது) = Mg (N)

$M \rightarrow$ தொங்கவிடப்பட்ட நிறை (நிறைத்தாங்கியின் நிறையும் சேர்ந்தது) (kg )

**விளக்கப்படம்**




**சுரமானியைப் பயன்படுத்தி மாறாத இழுவிசைக்கு கொடுக்கப்பட்ட கம்பியின் அதிர்வடையும் பிரிவின் நீளத்திற்கும், அதிர்வெண்ணிற்கும் இடையேயான தொடர்பைக் கண்டறிதல்**

**செய்முறை**

- சுரமானியை மேஜையின் மீது வைத்து அதனுடன் இணைக்கப்பட்ட கப்பியின் பள்ளம் தூய்மையாகவும் குறைந்த உராய்விலும் இருப்பதை உறுதி செய்தல் வேண்டும்.
- தெரிந்த அதிர்வெண் கொண்ட இசைக்கவையை இரப்பர் அட்டையால் தட்டி அதிர்வுறச் செய்யவேண்டும். சுரமானி கம்பியை அதிர்வுறச் செய்து, இரு அதிர்வு ஒலிகளையும் ஒப்பிடவேண்டும்.
- ஒலியானது ஒரே அளவாக கேட்கும் வரை விளிம்புக்கட்டை B–யை நகர்த்தி அதிர்வடையும் பிரிவின் நீளத்தை சரிசெய்யவேண்டும்.
- எடைதாங்கியில், ஆரம்ப நிறை 1 kg ஐ ஏற்றவேண்டும்.
- இறுதியாக சரிசெய்தபிறகு AB–கம்பியின் மையத்தில் சிறிய காகிதத்துண்டு (R) ஐ வைக்க வேண்டும்.
- இப்பொழுது இசைக்கவையை அதிர்வுறச் செய்து அதன் அடிப்பகுதியை விளிம்புக்கட்டை A–யின் மீது வைத்து, விளிம்புக்கட்டை B–யைச் சரிசெய்து காகிதத்துண்டு ஒத்ததிர்வினால் கிளர்ந்துறச் செய்யவேண்டும்
- விளிம்புக்கட்டை A, B – க்கிடையேயான நீளத்தை அளவிடவேண்டும். இந்த அளவானது இசைக்கவையின் அதிர்வெண்ணிற்கான அடிப்படைச் சுரமாகும்.
- நிறைத்தாங்கியில் 0.5 kg எடைகளை படிப்படியாக உயர்த்தி, அதே இசைக்கவைக்கு ஒவ்வொரு நிறைக்கும் ஒத்ததிர்வு நீளம் கணக்கிடப்படுகிறது.
- உற்றுநோக்கிய அளவீடுகள் பதியப்பட்டு அட்டவணைப்படுத்தப்படுகிறது.

**மாதிரி வரைபடம்**




**இழுவிசை T (N); நீளம் ($l^2$ (cm²) க்கும் இடையேயானதொடர்பு**

**காட்சிப்பதிவுகள்**

இசைக்கவையின் அதிர்வெண் = _________ Hz

**இழுவிசையுடன் ஒத்ததிர்வு நீள மாறுபாடு**

| **வ.எண்.** | **நிறை** M (kg) | **இழுவிசை** T=Mg (N) | $\sqrt{T}$ | **அதிர்வடையும் பிரிவின் நீளம்** l (m) | $\frac{\sqrt{T}}{l}$ |
|---|---|---|---|---|---|
| | | | | | |
| | | | | | |
| | | | | | |
| | | | | | |

**கணக்கீடு**

ஒவ்வொரு நிகழ்விற்கான இழுவிசைக்கும் $\frac{\sqrt{T}}{l}$ மதிப்பு கணக்கிடப்படவேண்டும்.

**முடிவு**

- கொடுக்கப்பட்ட அதிர்வெண்ணின் அதிர்வுகளுக்கு ஒத்ததிர்வின் நீளம் இழுவிசையின் இருமடிமூலத்திற்கேற்ப மாற்றமடைகிறது.
- கண்டறியப்பட்ட $\frac{\sqrt{T}}{l}$ ஓர் மாறிலி.



UNIT-12(XI-Physics_Vol-2) PRACTICAL FIRST YEAR.indd 315 10-09-2018 15:08:58

## இயற்பியலில் சில முக்கியமான மாறிலிகள்

(Some important constants in physics)

| பெயர் | குறியீடு | மதிப்பு |
|---|---|---|
| வெற்றிடத்தில் ஒளியின் திசைவேகம் | $c$ | $2.9979 \times 10^{8}$ m s$^{-1}$ |
| ஈர்ப்பியல் மாறிலி | $G$ | $6.67 \times 10^{-11}$ N m$^{2}$ kg$^{-2}$ |
| புவிஈர்ப்புமுடுக்கம் (கடல் மட்டத்தில் 45° குறுக்குக் கோட்டில்) | $g$ | 9.8 m s$^{-2}$ |
| பிளாங்க் மாறிலி | $h$ | $6.626 \times 10^{-34}$ J s |
| போல்ட்ஸ்மேன் மாறிலி | $k$ | $1.38 \times 10^{-23}$ J K$^{-1}$ |
| அவகட்ரோ எண் | $N_A$ | $6.023 \times 10^{23}$ mol$^{-1}$ |
| பொது வாயு மாறிலி | $R$ | 8.31 J mol$^{-1}$ K$^{-1}$ |
| ஸ்டீபன் – போல்ட்ஸ்மேன் மாறிலி | $\sigma$ | $5.67 \times 10^{-8}$ W m$^{-2}$ K$^{-4}$ |
| வியனின் மாறிலி (Wien's constant) | $b$ | $2.898 \times 10^{-3}$ m K |
| வெற்றிடத்தின் உட்புகு திறன் | $\mu_0$ | $4\pi \times 10^{-7}$ H m$^{-1}$ |
| படித்தர வளிமண்டல அழுத்தம் | 1 *atm* | $1.013 \times 10^{5}$ Pa |

